088

நவமணி.

உள்நாடு ரூ 1

வெளிநாடு ரூ 1½

ஆசிரியன் சி.ரா.ம இராமநாதன்

30 NOV 19..

NAVAMANI.

(A High Class Tamil monthly)

PALLATUR, RAMNAD Dt. S. INDIA.

Vol. 2. பிரஜோற்பத்தி-௵ ஆவணி-௴ No 8.

பொருளடக்கம்.

என்.	விஷயம்.	பக்கம்.
1.	கடவுள் வணக்கம்.	281
2.	விளம்பரம்.	282
3.	மஹாத்மாஜீயின் லண்டன் பயணம்:— பத்திராதிபர்.	283
4.	நமது முன்னோர்கள் எழுதிய ராஜநீதி நூல்கள்:— கோவை. திரு. சி. கு. நாராயணசாமி முதலியாரவர்கள்.	288
5.	எகிப்திய மாதர் திலகம் எஸ்தர்:— திரிசிரபுரம். வரகநகர். வரகவி திரு. சவுரிநாதன் அவர்கள்.	293
6.	கோள் சொல்லல்:— திரு. ச. முனுசாமி பிள்ளையவர்கள்,	298
7.	பைந்தமிழுக்குத் தொண்டுபுரிந்த பன்னிரு செல்வர்கள்:— திரு. பாற்கடலோன் அவர்கள்,	300
8.	மாணவரின் முதல் வேலை:— மகாத்மா காந்திஜீ.	303
9.	மணியொளி:— பத்திராதிபர்	306
10.	திருப்பத்தூர் தாலுகா அறிக்கை.	310
11.	சம்பராமாயணக் கதிர்மணிக்கோவை:— திரு. நாரணன் அவர்கள்.	311
12.	பாண்டியநாட்டுச் சிற்பக்கோயில்:— பழநி, திரு. நா. நடராஜ முதலியாரவர்கள்.	314
13.	கள்வர் கவர்ந்த கன்னிகை:— கோவை. திரு. சி. கு. நாராயணசாமி முதலியாரவர்கள்.	317

சந்தாதாருக்கு அறிவிப்பு.

வெளிநாட்டில் புதிதாய்ச் சந்தா செலுத்திய யாவருக்கும் பத்திரிகையை அனுப்பிவருகிறோம். எனினும், எவருக்கேனும் பத்திரிகை கிடைக்காமலிருந்தால் அவர்கள் சந்தா செலுத்திப் பெற்றுள்ள நம்பரைக் குறித்துச் சரியான விலாசந் தெரிவித்தால் உடனே பத்திரிகை அனுப்பப்படும். சிலர் ரூபாயைமட்டும் அனுப்பி விலாசம் அறிவிக்காம லிருக்கின்றனர். யாவரும் ரூபாய் அனுப்பும் பொழுதே சரியான விலாசத்துடன் கடிதமொன்றும் எழுதவேண்டுகிறோம்.

20 NOV 1931

கடவுள் வணக்கம்.

தந்த தனன தனனு தனனதன
தந்த தனன தனனு தனனதன
தந்த தனன தனனு தனனதன தனதான.

தொந்தி சரிய மயிரே வெளிறநிறை
தந்த மசைய முதுகே வளையஇதழ்
தொங்க ஒருகை தடிமேல் வரமகளிர் நகையாடித்
தொண்டு கிழவ னிவனு ரெனஇருமல்
கிண்கி ணெனமு னுரையே குழறவிழி
துஞ்சு குருடு படவே செவிடுபடு செவியாகி
வந்த பிணியு மதிலே மிடையுமொரு
பண்டி தனுமெ யுறுவே தனையுமிள
மைந்த ருடைமை கடனே தெனமுடுகு துயர்மேவி
மங்கை அழுது விழவே யமபடர்கள்
நின்று சருவ மலமே ஒழுகவுயிர்
மங்கு பொழுது கடிதே மயிலின்மிசை வரவேணும்
எந்தை வருக ரகுநா யகவருக
மைந்த வருக மகனே இனிவருக
என்கண் வருக எனதா ருயிர்வருக அபிராம
இங்கு வருக அரசே வருகமுலை
உண்க வருக மலர்சூ டிடவருக
என்று பரிவி னுடகோ சலைபுகல வருமாயன்
சிந்தை மகிழு மருகா குறவரிள
வஞ்சி மருவு மழகா அமரர்சிறை
சிந்த அசுரர் கிளைவே ரொடுமடிய அடுதீரா
திங்க ளரவு நதிசூ டியபரமர்
தந்த குமர அலையே கரைபொருத
செந்தி னகரி லினிதே மருவிவளர் பெருமாளே.

இன்றே சேருங்கள்!

அன்பர்களே!

பள்ளத்தூரிலிருந்தும் குறைந்த சந்தாவில் சீக்கிரம் வெளிவரவிருக்கும் "சத்தியாக்கிரஹி" என்ற உயரிய வாரப்பத்திரிகைக்கு இன்றே முன்பணமனுப்பிச் சந்தாதாரராகச் சேருங்கள். தேசீயக் கொள்கை தாங்கிக் காங்கிரஸூம் மஹாத்மா காந்தியும் நமது இந்திய மக்களுக்கு இடும் கட்டளைகளைப் பரவச்செய்யவும் இந்திய நிலைமையைத் தெளிவாய் ஏழைமக்களுக்கு உணர்த்தவும் சமரசமுறையில் வெளிவா விருக்கும் வாரப்பத்திரிகையாகிய இச் "சத்தியாக்கிரஹி"க்குச் சந்தா விவரமாவது:—

உள்ளூர் வருட சந்தா	ரூ. 1—0—0
உள்நாடு வருட சந்தா	ரூ. 1—8—0
வெளிநாடு வருட சந்தா	ரூ. 2—4—0
தனிப்பிரதி	ரூ. 0—0—3

மானேஜர்

"சத்தியாக்கிரஹி" ஆபீஸ்

பள்ளத்தூர்.

உ

எல்லாம் தெய்வச்செயல்.

'நவமணி.'

பெற்ற தாயும் பிறந்தபொன் னாடும்
நற்றவ வானிலும் நனிசிறந் தனவே. — பாரதியார்.

மேற்பிறந்தா ராயினுங் கல்லாதார் கீழ்ப்பிறந்துங்
கற்றா ரனைத்திலர் பாடு. — திருவள்ளுவர்.

மாலை 2. } பள்ளத்தூர் பிரஜோற்ப, ஆவணி { மணி 8.

மஹாத்மாஜீயின் இலண்டன் பயணம்.

நீண்ட நாள் நாம் எதிர்பார்த்தபடி பல்வேறு சங்கட நிலைமைகளையும் முட்டுக் கட்டைகளையுந் தகர்த்தெறிந்து நமது தேசத்து மாபெருந்தலைவர், காந்திஜீ 29—8—31-உ பம்பாயை விட்டு 'ராஜபுதானா' கப்பலில் லண்டன் பயணமானார் என்ற செய்தியைக்கேட்ட எவர் உள்ளமும் களிப்படையும் என நம்புகிறோம். சென்ற நவமணி வெளிவந்த பின்னர் ராஜீய வானில் படர்ந்து அடர்ந்த கருமேகப் பரிணாமத்தால் சீமைப் பிரயாணந் தடைப்பட்டுப் பெரும் பிணக்குகளுக்கு இடமுண்டாகி காந்தி—இர்வின் ஒப்பந்தப்படி இருசார்பாரும் நடந்துகொள்ளவில்லை யென ஒருவரை யொருவர் குற்றச்சாட்டுதல் கூடச் செய்துகொள்ளுந் தூரம் காரியங்கள் சங்கட நிலைமையடைந்து விட்டதோடு மீண்டும் கடுமையாகச் சுதந்தரப்போர் துவக்கத் தேசிய வாதிகள் யத்தனப்பட்டும் விட்டனர். இந்நிலைமை ஏற்பட்டதற்குக் காரணம் பம்பாய் கவர்னரின் பிடிவாதச் செயல் என்பதை யாவரும் நன்

கறிவர். அவ்வாறிருந்தும் லண்டன் மஹாநாட்டில் தேசீய சபையார் கலந்துகொள்ளுவதில் மஹாத்மாஜீக்கு இருந்த பேராவலால் அவர்கள் இறுதியாக வைசிராயைச் சந்தித்த பொழுது குறைந்தபக்ஷமான ஓர் மத்தியஸ்த விசாரணை நடத்தவேண்டுமென்பதற்காக ஓர் நியாயாதிபதியை யாகிலும் நியமிக்கவேண்டுமெனக் கேட்க; அதற்கும் இணங்கச் சர்க்கார் மறுக்கவே, காங்கிரஸ் கமிட்டியார் லண்டன் மஹாநாட்டில் தாங்கள் கலந்துகொள்வதை ரத்துச்செய்துவிட்டனர். இதற்குப் பின்னர் தெய்வச்செயலாகவும், லண்டன் மஹாஜனங்கள் ஒற்றையாடையுடுத்தித் திரியும் உத்தமகாந்தியைக் கண்குளிரக் காண்பதில் ஏற்பட்ட தடையாலுண்டாகிய துர்பாக்கிய நிலைமையை யுணர்ந்தும் தங்கள் மனப்பூர்வமான அபிப்பிராயத்தை இந்திய மந்திரிக்கும் இந்திய சர்க்காருக்கும் உணர்த்தினர். அதன்பின்னரே ராஜீயவானில் முன்னிருந்த கருமேக மறைந்து நம்பிக்கைச் சூரியன் உதயமாயினன். மீண்டும் ஒரு முறை மஹாத்மாஜீயும் இந்திய வைசிராய் வில்லிங்டன் பிரபுவும் சந்தித்து எவ்வளவு சாத்தியமோ அவ்வளவு சாத்தியம் விட்டுக்கொடுத்து மஹாத்மாஜீயை லண்டன் அனுப்பவும், இந்திய தேசீய சபை லண்டன் மஹாநாட்டில் கலந்துகொள்ளவும் முடிவுகள் செய்தனர். இதன் மத்தியில் டாக்டர். அன்சாரி, பிரபாசங்கா பட்டாணி போன்ற தேசபக்தர்களின் சலியா உழைப்புப் போற்றுதற்குரியதாயினும், லண்டன் மஹாஜனங்களின் முன் விஜயஞ்செய்து தமது கோரிக்கையை வெளியிடுவதில் மஹாத்மாஜீக்கு இருந்த பேராவலும் எவ்விதத்திலும் மஹாத்மா காந்தியை லண்டன் அனுப்பவேண்டுமென்பதில் இந்திய வைசிராய் லார்டு வில்லிங்டன் பிரபுவிற்கிருந்த மனஓர்மையும் பல்வேறு வழியிலும் ஒருமுகப்பட்டு நல்ல முடிவுகாண சந்தர்ப்பங் கொடுத்ததற்கு நாம் இங்கு இருவரையும் போற்ருதிருக்கமுடியவில்லை. இவ்வளவுதூரம் நிலைமையை முற்றவிட்டு மஹாத்மாகாந்தியின் அபிப்பிராயமான மத்தியஸ்தர் ஒருவரை நியமிக்கும் விஷயத்திற்கிணங்கிய இந்திய சர்க்கார் முன்னமேயே அவ்வபிப்பிராயத்தை ஒப்புக்கொண்டு இம் முடிவிற்கு வந்திருப்பரேல் இன்னும் நன்ருக விருந்திருக்கும். ஆனல், நமது சர்க்கார்

எந்த நிலையிலும் கடாசிப்படி வரை தங்கள் கையிருப்பைக் காட்டி விட்டே பின்னர் சமாதான நிலைமைக்கு வருகிறதென்ற பழக்கத் தைக் கைக்கொண்டுள்ள தென்பதை நாம் பல ஆண்டுகளாக சுதந்தர எண்ணம் இந்தியர் உள்ளத்தில் குடிகொண்டது முதல் ஏற்பட்ட பல்வேறு சச்சரவுகளின் முடிவிலும் காணும் நிலையி லிருந்து அறிகிறோம்.

பொதுவாக இந்தியர் உள்ளம் சுதந்தர உணர்ச்சியில் முழு தும் ஈடுபட்டுள்ள இவ்வேளையில் பிரிட்டிஷார் இந்தியர்களின் நண்பர்களாக இன்னும் இருக்கவேண்டுமானால் கூடுமானவரை இந்திய சுதந்தரவாதிகளைக் கஷ்டப்படுத்தாமல் அவர்கள் கோரும் ஒவ்வோர் நியாயமான உரிமைகளையும் பற்றி நன்கு பரிசீலனை செய்து அவர்களின் சொந்த உரிமைகள் விஷயத்தில் விட்டுக் கொடுத்துப் போவதே நன்மார்க்கமாகும். அதன்னியில், அவர் களைத் துன்புறுத்தி சமாளிக்கமுடியாத நிலைமையில் அவர்களு டன் ராஜிக்கிணங்குதல் ராஜதந்திர மென்று கருதப்பட்டபோதி லும் அது ஓர் சிறந்த ராஜதந்திரமாகாது.

முடிவாக நமது நாட்டவர் பலரும் எண்ணியபடியும் லண்டன் மஹாஜனங்கள் எதிர்பார்த்தபடியும் மஹாத்மாஜீக்கு தமது தள் ளாத வயதில் பல்வேறு மனிதவர்க்கத்தால் சாத்தியப்படாத ஆசார அனுஷ்டானாதிகள், ஆகாராதி நடை உடை பாவனை களை வைத்துக்கொண்டு, அவைகளுக்கு யாதொரு வழுவும் வராமலும் தாம் எண்ணிச்செல்லும் காரியம் ஜயம்பெறவும் போதிய சக்தியையும் சௌகர்ய நிலைமையையும் எல்லாம்வல்ல எம்பிரான் அளித்து அவரைவெற்றியுடனும் பரிபூரண சௌகர்யத் துடனும் எம்மிடை மீண்டும் சேர்க்குமாறு மனமார வாழ்த்தி வணங்குகினறோம்.

இப்பொழுது காந்தி இர்வின் ஒப்பந்தப்படி சில இடங்களில் சரியாக சர்க்கார் நடந்துகொள்ளவில்லை யாகையால் மஹாத்மா லண்டன் செல்ல வேண்டாமெனச் சொல்லியும் மத்தியில் மஹாத்மாஜீயின் லண்டன் பயணந் தடைப்பட்டிருந்ததுகண்டு மனப்பூர்வமான பூரிப்படைந்து மிருந்த ஒரு சிலர் சிவப்புக்கொடி தாங்கி பம்பாயில் சில பஹிஷ்கார வேலை செய்தாரென நாம்

கண்டபொழுது அவர்கள் தேசத்தின் மீது வைத்துள்ள ஆர்வ மிகுதியால் இவ்விதம் செய்கிறார்களென்பதையும் நாம் ஒப்புக் கொள்ளவே செய்கிறோம். ஆனால் மஹாத்மா லண்டன் செல்ல வேண்டுமென்ற அபிப்பிராயந்தாங்கிய சிலர் அவ்வாறு சிவப்புக் கொடிதாங்கியவர்களைத் துன்புறுத்தியது வருந்துவதற்குரிய தொன்றாகும். எதற்கும் எதிர்ப்பிருக்கவே செய்யும். எதிர்ப்பு வருமாயின் பல்வேறு கஷ்டப்பட்டேனும் அவர்களைத் தமது அபிப்பிராயத்தில் சிக்கும்படி செய்யவேண்டுவது தான் அறிவாளி களின் வேலையே யல்லாமல், அவர்கள் மாட்டு பலாத்காரமாக நடந்துகொள்ளுவது நமது அஹிம்ஸா மார்க்கத்திற்கு முற்றி லும் விரோதமானதாகும்.

மஹாத்மாஜீ இப்பொழுது லண்டன் செல்வதாலும் அவர் களும் இதர தேசீயவாதிகளும் லண்டன் மஹாநாட்டில் கலந்து கொள்ளுவதாலும் நமது காங்கிரஸ் மஹாசபையின் கோரிக்கை களின்படி பூரணபலன் கிட்டிவிடுமென்று எந்த இந்தியனும் எதிர்பார்க்கமுடியாது. எவனொருவனும் ஏமாந்து பிறன் ஒருவன் கையில் கொடுத்த சொத்தை நேருக்குநேராகச் சண்டையிட்டோ அல்லது விஷயத்தை புணர்த்தியோ எதிரியினிடமிருந்து தன் சொத்தைப் பற்றிக்கொண்டால் தான், தன் சொத்தை மனப்பூர்வமாக மீண்டும் பெற்று அனுபவிக்கமுடியுமே தவிர, வேறுவகையில் அவனுக்குக் கொடுத்துவிடுவானென்றோ அல்லது மத்தியஸ்தர்கள் வாங்கிக்கொடுப்பார்களென்றோ எண்ணு வது பகற்கனவாகவே முடியும். இவ்வகையில் மஹாத்மாஜீ லண்டன் சென்றுவிட்டதால் நாம்கோரியபலன் பூராவும் பிரிட்டிஷ் சர்க்காருக்கு மஹாத்மாஜீயின் இதோப தேசத்தின் மூலம் மூளை யில் எட்டி அப்படியே மனப்பூர்வமாக ஏற்று எல்லா சுதந்தரங் களையும் இந்திய தேசீய மஹாசபையின் ஏக பிரதிநிதியான எம்பிரான் காந்திஜீயின் கையில் கொடுத்தனுப்பிவிடுவார்களென எவரும் எதிர்பார்க்கவே முடியாது. ஆயினும் மஹாத்மாஜீ லண் டன் சென்றிருப்பதால் லண்டன் மஹாநாட்டிலும் லண்டன் மஹாஜனங்களிடையிலும் ஏனைய பிரதிநிதிகள் போலல்லாமல், தைரியமாயும் உள்ளதை உள்ளபடியும் நேருக்குநேராக எடுத் துரைக்கப் பெருஞ் சந்தர்ப்பமேற்பட்டுள்ளது. இதை அறிந்து

பிரிட்டிஷ் சர்க்கார் நன்ருக யோஜனை செய்து இந்தியாவின் சகல ஜனங்களாலும் நன்கு ஒப்புக்கொள்ளப்பட்டவரும் சிறிதும் தன்னலங்கருதாது உண்மைக் குழைக்கும் உத்தமருமானவரும் இவரே யாகையால் இதைக் கவனித்துத் தக்கன செய்யவேண்டுமென நன்கரலோசிப்பதற்கு இது ஓர் கடாசிப்படியான சந்தர்ப்பமாகவே கொண்டு சரியான முடிவுகண்டு இந்தியப் பிரதிநிதிகளைக் களிப்புறச் செய்வதன்னியில் இந்திய மக்களின் பெரும்பாலோர் உள்ளத்தில் உதயமாகி வழிந்தோடும் சுதந்தரப் பெருக்கத்தைத் தடுக்கவும் நன்மார்க்கங் காண்பரேல் நலமாகமுடியும். இல்லையேல், வெளிநாட்டவர் யாவரும் மஹாத்மாஜீயும் ஏனைய இந்தியப் பிரதிநிதிகளும் லண்டனில் சென்று எவ்வளவோ தங்கள் குறைகளை எடுத்துரைத்தும் பிரிட்டிஷ் சர்க்கார் செவிசாய்க்கவில்லை என்ற உண்மையை உணரவே இச்சந்தர்ப்பம் பெரும் பிரயோஜனப்படும். ஒன்று ஜயம் கிடைக்கவேண்டும். அல்லது நமது கோரிக்கை நியாயமானது அதை அளிக்க அதிகாரவர்க்கந் தவறிவிட்டது என்பதை உலகம் நன்கறியவேண்டும். இவ்விரண்டில் ஒன்று காணவே நம் மஹாத்மாஜீயின் லண்டன் விஜயம் இப்பொழுது சந்தர்ப்ப மளித்துள்ளது. இதில் முந்தியது கிடைக்குமென இப்பொழுது மஹாத்மாஜீ லண்டன் செல்வதில் ஏற்பட்ட பல்வேறு தடைகளிலிருந்தும் லண்டன் கவர்ன்மெண்ட் மாற்றத்திலிருந்தும் பிந்திய அதன் நடைமுறைகளிலிருந்தும் நாம் நிச்சயமாக நம்பமுடியவில்லை. ஆயினும் பிரிட்டிஷ் சர்க்காரின் பிரதம மந்திரி திரு. ராம்சே மாக்டொனல்ட் அவர்கள் உலகசமாதனத்தில் பெயர்போனவர்களானபடியால் இந்தியர் விஷயத்தில் எவ்வித முடிவு காண்கிருர் என்பதைச் சிறிது காத்திருந்து கவனிப்போம். அம்முடிவு எவ்வாருயினும் நமது நிலைமையைச் செவ்வையான முறையில் லண்டன் மஹாஜனங்களும் உலகத்தின் எல்லா கவர்ன்மெண்டுகளும் அறியப் போதிய நிலைமையில் எடுத்துரைக்கத் தகுந்த நமது மனப்பூர்வமான ஒப்புதல் பெற்ற தனிப் பிரதிநிதியான எம்பிரான் காந்திஜீயவர்களின் லண்டன் பயணம் சிறந்த ஓர் சாதனமாக விளங்குமாகையால் அவர்கள் தைரியத்தோடும் வெற்றியோடும் காரியங்களை முடித்துக்கொண்டு இந்தியா வந்துசேர உதவிபுரியும்படி மீண்டுங் கடவுளை வணங்குகின்ருேம். வெற்றி உதயமாகுக! மஹாத்மாஜீக்கு லண்டன் பயணத்தால் வெற்றி உதயமாகுக!!

நமது முன்னோர்கள் எழுதிய

ராஜநீதி நூல்கள்.

ஆராய்ச்சி

(ஆந்திர மொழிபெயர்ப்பு)

கோவை. திரு. சி. கு. நாராயணசாமி முதலியாரவர்கள்.

(முன்தொடர்ச்சி)

இரண்டாவது:— காமந்தக நீதிசாரம் 300-ஆம் ஆண்டின் சமீபத்தில் எழுதப்பட்டதல்ல. இருநூறும் ஆண்டின் இறுதியில் எழுதப்பட்டதே யாகும். இவ்வுண்மை வடமொழிவல்ல 'தண்டி' கவி இயற்றிய 'தசகுமார சரித்திர'த்தில் முதல் அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. தண்டியார் ஆறுவது நூற்றுண்டினர். ஆறுவது நூற்றுண்டிலேயே 'காமந்தகம்' எங்கும் பிரசித்தமாகப் பரவியிருக்கவேண்டுமென யூகிக்க விடமிருக்கிறது. சிலர் தசகுமாரசரித்திரத்தில் இப்பாகம் தண்டியாரால் இயற்றப்பட்டதல்ல வென்றும், பிரக்ஷிப்தம் என்றும் வாதிக்கின்றனர். இது உண்மையானுல், நமது நீதிசாரம் ஆறும் நூற்றுண்டதென்று கூறுவதற்கில்லை. எட்டாம் நூற்றுண்டிலிருந்து காமந்தகம் மிகப் பிரசித்திபெற்றுவந்ததாகக் கூறுகின்றனர். பின்னர் இயற்றப்பட்ட 'இதோபதேச' முதலானவைகளும் அவற்றின் சுலோகங்களை பலவும் அவ்வாறே பிரசித்திபெற்றன வெனலாம். ஆகவே, காமந்தக நீதிசாரம் எட்டாம் நூற்றுண்டில் இயற்றப்பட்டதென்றே சொல்ல வேண்டும். அதாவது:— இன்றைக்கு 800 ஆண்டுகளுக்கு முன்னரென்று.

இதுபற்றிக் காலநிர்ணயம் செய்வதற்கு நூலின்கண் ஆதாரங்களில்லை. நமது பண்டைய நூல்களனைத்திலும் இது ஒரு பெரிய குறையாகவே யிருக்கிறது. தம்மைத் தாமே புகழ்ந்து கொள்வதில் நமது முன்னோர்கள் விருப்பமற்றவர்களாகவே இருந்திருக்கின்றனர். அம்மட்டோ! தாங்கள் இயற்றிய அரும்

பெரு நூல்களில் தமது வாழ்க்கை நலம், ஜீவியகாலம், அக்கால சம்பவங்கள், தமது கல்வியளவு, விசேட நிகழ்ச்சிகள் முதலிய வற்றைக் குறித்தும் வைத்தார்களில்லை. காமந்தகர்கூட அத்தகை யவரே. காமந்தக நீதிசாரத்திற்கு அகலவுரை யெழுதிய ஸ்ரீசங்கராசாரிய சுவாமிகளும், நூலாசிரியரைப்பற்றி எதுவும் கூறினார்களில்லை. காமந்தகர் தமது சித்தாந்தங்களின் உண்மையை வெளிப்படுத்துவதற்காக சில அரசர்களுடையவும், குலத்தினுடை யவும், பெயர்களை எடுத்துக்காட்டியிருக்கின்றனர். இவை சம காலத்தவர்களையும், அதற்குச் சற்று முந்தியவர்களையும் பற்றிய பெயர்களாக விருந்திருக்குமாகில், நூலாசிரியரின் காலத்தை நிர்ணயித்தறிவதற்கு நமக்குப் பெரிதும் உதவியாயிருந்திருக்கும். ஆசிரியர் அவ்வழியில் முயலாமல், பூர்வீக நூலாசிரியர்கள் எந்த திருஷ்டாந்தங்களைக் காட்டினார்களோ அவைகளையே தாமும் காட்டியுள்ளனர். வைஜவன், நகுஷன், தாண்டக்யன், ஜன்மே ஜயன், ஜலன், வாதாபி, பௌலஸ்தியன், தம்போத்பவன், பரசு ராமன், அம்பரீஷன், நாபாகன், நளன் ஆதியோர் பெயர்களே காமந்தகத்தில் காட்டபபட்டவை. இவர்கள் புராணங்களில் பிரசித்திபெற்றவர்களே யன்றி, சரித்திரப் பிரசித்தியுடையவர்க ளல்ல. ஆனதால், காமந்தகர் காலத்தை வரையறுத்துக் கூறக் கூட வில்லை.

நூலாராய்ச்சிக்கு ஆசிரியர்கால நிர்ணயம் அவசியமா? நூலி னது குணகுணங்களைப் பற்றிய விஷயமே நமக்கு முக்கியமானது என்று சிலர் சொல்லக்கூடும். காலநிர்ணயத்தினால் இரண்டு நன்மை கள் உண்டாகின்றன. ஒன்று—நீதி சாஸ்திரங்களைப்பற்றிய நூல் கள் வடமொழியில் மிகுதியாகவுள்ளதால், இவைகளில் எது முன்னர் எழுதப்பட்டது, எது பின்னர் எழுதப்பட்டது என் பதைத் தெரிந்தாலல்லாமல், நூலாசிரியர்களின் அபிப்பிராயங்கள் எந்தக்கிரமத்தில் அநுசரித்து மாறுகின்றதோ, நூலின் தன்மை அப்பொழுது எவ்விதம் விருத்தியடைந்துளதோ, அல்லது நசித்துளதோ என்பவற்றை வரையறுப்பதற்கு உதவிகூடுவது; மற்றொன்று-நூலாசிரியர்கள் சுதந்தரமுடையவர்களா? சுதந்தர மில்லாதவர்களா? என்பவற்றைப் பகுத்தறிவதற்குத் துணையா

யிருப்பது. இவ்விரண்டுமில்லாத நூல்கள் ஆராய்ச்சிக்குத் தகுதி யற்றவை யென்று தாராளமாகக் கூறலாம்.

காமந்தகர் நீதிசாரத்தை எழுதுவதற்குரிய தமது நோக்கத்தை அடியில்வரும் சுலோகத்தால் அறிவித்திருக்கின்றனர். அது வருமாறு:—

"வர்த்தனுத்தஸ்ய ஸுத்ருஸோவித்யானும் பாரத்ருஸ்வந:
ராஜவித்யாப்ரியதயா ஸம்க்ஷிப்தக்ரந்த மர்த்தவத்"
"உபார்ஜனே பாலனேச பூமேர்ப்பூமிஸ்வரமப்ரதி
யக்கிஞ்சிதுபதேக்ஷ்யாம: ராஜவித்தியாவிதாம்மதம்"
(காமந்தகம் முதற்சர்க்கம் சுலோகம் 7—8)

(பொருள்.)

உலகமக்கள் பரிபாலனத்தைப்பற்றி ராஜவித்தையில் ஒப்புவமையற்றவர்களின் உடன்பாட்டையும், கௌடில்யரது கிரந்தத்தையும் அநுசரித்துத் தெளிவாக எழுதத் தொடங்கியதென்பது.

காமந்தகர் கௌடில்யரது கிரந்தத்தை எவ்வளவுதூரம் பின்பற்றிச் செல்வதும், பின்பற்ருது சுயேச்யை மேற்கொண்டு போவதும் இனித்தான் அறியவேண்டியிருக்கிறது. கௌடில்யரது நூலில் சூத்திரபாகங்களே யல்லாமல் ஆறுயிரம் சுலோகங்களுமிருக்கின்றன. காமந்தகரது நூலும் சுலோக ரூபமானதே. அவற்றின் சுலோகங்களின் எண்ணிக்கை ஆயிரத் திருநூற்றைம்பது.

இனி கௌடில்யரது கிரந்தைத் தழுவியும், விலக்கியும், வேறுபட வுரைத்தும், முன்மாதிரியாகக் கொண்டும் தமது மதத்தை நிலைநாட்டுவதில் காமந்தகர் கைக்கொண்ட முறை எத்தகையதென்பதைக் கவனிப்பாம்.

கௌடில்யரது நூலினுள்ள பாகங்களுக்கு 'அதிகாணம்' என்று பெயர். அதிகரணம்—என்ருல் நிலைக்களம் என்பது பொருள். அத்தகைய நிலைக்களம் அந்நூலில் பதினேழுருக்கின்

றன. அவைகளில் அத்யக்ஷப் பிரசாரம், தர்மஸ்தீபம், கண்டகசோதனம், யோகவ்ருத்தம், சங்கவ்ருத்தம், ஔபநிஷதிகம், தந்திரயுக்தி என்ற ஏழு அதிகாரங்கள் பிரதானமானவை. இவற்றில் ஆறு அதிகாரங்களைக் காமந்தகர் முழுதும் விலக்கிவிட்டு கண்டகசோதனம் என்ற அதிகரணத்தை மட்டும் தமது நூலில் எடுத்தாண்டிருக்கின்றனர். அந்நூலில் காணும் சில அமிசங்களை இவர், கௌடில்யர் 'யோகவருத்தம்' என்ற அதிகரணத்திலிருந்து கிரகித்திருக்க வேண்டுமென யூகிக்க இடமிருக்கிறது. அல்லாமல், ராஜத்துரோகம், பிரஜாத் துரோகம் செய்கின்றவர்களைத் தாழ்ந்த மக்களென்பதும், அவர்களைத் தண்டித்தல் அவசியமானதென்பதும்; கௌடில்யரது சித்தாந்தம். காமந்தகரோ இவற்றிற்குடம்படாது இராஜத்துரோகி ஒருவனே கீழ்மகன் எனக் கருதக்கூடியவன் என்று தமது கருத்தை நீதிநூலில் விளக்கியிருக்கின்றனர். மேலும், இவ்விஷயத்திற் கநுகுணமாக யோகவ்ருதத்தில் அநுஜீவ வ்ருத்தப்பிரகாணத்தைச் சற்று விரிவுபடுத்தி அதில் தமது கொள்கையை நிலைநாட்டியும் இருக்கின்றனர்.

எஞ்கிய அதிகரணங்களைத் தமது நூலில் எடுத்து விவரிக்கப்படாமலே காமந்தகர் விட்டதற்கு ஏதேனும் காரணமிருக்க வேண்டுமெனக் கருதுவதாயின், அது அப்பிரதானமாயிருக்க வேண்டுமென அவர் எண்ணியிருக்கவேண்டும்.

'தந்திரயுக்தி' என்ற அநுகரணத்தில் தாம் உபயோகித்துள்ள பரிபாஷைகளின் பொருள்களைக் கௌடில்யர் தெளிவாக விளக்கியிருக்கின்றனர். ஆயின், காமந்தகர் அப்பகுதியை யாதுகாரணத்தாலோ தமதுநூலில் எடுத்தாளாமல் விடுத்துள்ளனர். அவர் அங்ஙனம் செய்த நியாயமே. ஏனெனில், 'ஔபநிஷதிகம்' என்ற அதிகரணத்தில், 'அரசன் தர்மம் தவறிய பகைவர்களிடத்தில் உபயோகிக்கவேண்டிய தண்டோபாயத்தை விளக்கிக்கூறியிருப்பதனாலும், இவை பொது அநுஷ்டாத்திலிருக்கக்கூடியவல்ல வானதனாலும், நீதிசாரமாகிய தமது சிறு நூலில் இவைசேர்க்கப்படவேண்டிய அவசியமில்லையென எண்ணியதனாலென்க. மற்றும் இவரால் விளக்கப்பட்ள்ள அதிகரணங்களுக்கும் வாசகர் மேற்காட்டிய காரணத்தை

யே கொள்ளவும். ஆனால், 'தர்மஸ்தீபம்' 'கண்டகசோதனே' என்கின்ற அதிகாரணங்களைக் காமந்தகர் தமது நூலில் சேர்க்காமல் விட்டதற்குக் காரணங்கூறுகின்றனர். அது—'இவையிரண்டும் நியாயசாகைக்குச் சம்பந்தப்பட்டவை; இவ்விஷயங்களை ஸ்மிருதிகளை விரிவாக விவரிப்பது ஆசாரத்திற்கு ஏற்றது; அல்லாமல் தமது காலத்தில் ஸ்மிருதி நூல்களின் எண்ணிக்கை அதிகமாயிருந்ததனாலும், ஸ்மிருதிசூத்திரங்களைப்பற்றி வாதப்பிரதிவாதங்களை நிர்ணயிப்பது சர்வசாதாரணமாயிருந்ததனாலும், நீதிசாஸ்திர கிரந்தத்தில் இவைபற்றிக்கூறுவதற்கு அவசியமில்லை யென்பதே,' 'சங்கவ்விருத்தம்' என்ற அதிகாரணத்திற்குங்கூட மேற்கூறிய காரணத்தையே கொள்வது பொருந்தும்.

மற்றும், 'அத்யக்ஷப்பிரசாரம்' 'யோகவ்ருத்தம்' என்ற அதிகரணங்களில் அரசியல் நிர்வாகம்பற்றிய ஆராய்ச்சிகள் மிகவும் பிரதானமாயுள்ளன. இப்பிரதான பாகங்களைக்கூடக் காமந்தகர் தமது நூலில் குறிப்பிடாமல் விட்டிருக்கின்றனர். இங்ஙனம் விட்டதற்கு தகுந்த காரணங்களிருக்கவேண்டும். ஆனால், கௌடில்யர் இவ்வதிகரணங்களில், அரசாங்க நிர்வாகங்களுக்கு முக்கியமான அங்கங்கள் யாவை? அவ்வங்கத்தினர் செய்யவேண்டிய கருமங்கள் எவை? ஆட்சி முறை எவ்விதமிருக்கவேண்டும்? அரசியல் நிர்வாகிகளால் தேசத்திற்கு நஷ்டமுண்டாகாமல் பாதுகாப்பதற்குரிய முன்னேற்பாடுகளெவை? என்பனபற்றிய செய்திகளைத் தெளிவாக விவரித்திருக்கின்றனர்.

பூசம்பாதனமும், பூமிபரிபாலனமும், ராஜதர்மங்களென்று கற்றுவல்ல பண்டிதர்கள் அங்கீகரித்திருக்கின்றனர். மேலே குறித்த அமிசங்களனைத்தும் அரசியலில் சம்பந்தப்பட்டவை. ஆனால், காமந்தகர் நூலைச் சிரத்தையோடு வாசித்தபோது பரிபாலனத்தைவிட சம்பாதனமே பிரதானமென்பது அவர் கருத்தாகக் கண்டது.

(தொடரும்.)

எகிப்திய மாதர்திலகம்

எஸ்தர்.

திருசிரபுரம். வரகநகர். வரகவி. திருவாளர் சவரிநாதன்

எழுதுவது.

எகிப்து தேசத்தில் ஆல்டிமான் என்ற ஓர் மன்னன் அரசாண்டு வந்தான். அவனுக்குப் போதிய படிப்பு இல்லாததாலும், ராஜீயகாரியங்களை செவ்வனே தானே நடத்தத் திறமை இல்லாததாலும் சகலகாரியங்களையும் தன் மந்திரியாகிய ஆமானிடம் சகல அதிகாரங்களையும் கொடுத்து அவனையே சரணாகதியாக நம்பியிருந்தான். அவன் சகல துர்க்குணங்களுக்கும் உறைவிடம். தானென்ற அகங்காரமும், மமதையும் கொண்டவன். அவனுக்கு அவனுடைய குழந்தைகளின் மீதுகூட ஓர்வித பிரியமும் கிடையாதென்றால் அவன் பெருமையை இதை வாசிப்போரே யூகித்துக்கொள்ளலாம்.

இவனுக்கு இரண்டாம் மந்திரியாகிய மர்டோக் தாழ்ச்சி, பொறுமை, சினேகம், கற்பு, உதாரம் முதலிய சகல நற்குணங்களும் ஒருங்கே அமைந்தவர். யூத ஜாதியினைச் சேர்ந்தவர். அவர் இவ்வுலக வைபோகம் இந்திரஜாலமென்றும், இன்றைக்கிருப்பது ஓர் சந்தேகமென்றும் நன்கறிந்து, தன் சேவையின் பலனை தன் மதத்தாரும், பொதுஜனங்களும் அடையும்படியும், தனக்கு இல்லறப்பற்றுக்கள் தன்னை இவ்வுலக மாய்கையில் ஆழ்த்தி எம்பெருமான் சேவையினின்று பேதலிக்கச்செய்யாவண்ணம், மணத்தை வெறுத்து சம்பூர்ண பிரமச்சாரியம் அனுசரித்து வந்தார்.

ஒளிக்கும் இருளுக்கும் சம்பந்தமேது? மணத்திற்கும், துர்க்கந்தத்திற்கும் சம்பந்தமேது? எனவே ஆமான் மர்டோக்கைவெறுத்து அவனை எவ்விதத்திலும் அவமானப்படுத்த கங்கணம் கட்டிக்கொண்டிருந்தான். இன்னும் பல காரணங்கள்

ஆமானை மர்டோக்குக்கு பகைமையாக்கின. மர்டோக்குக்கு ஓர் தங்கை இருந்தாள். அழகே உருவெடுத்தார்போல் அவதாரமான அந்நங்கை குண அழகும் பொருந்தியதால் அவளை மனைவியாக அடையும் பாக்கியத்திற்குப் பலர் எதிர்பார்த்திருந்தார்கள். அதில் ஆமானும் ஒருவன். கடைசியில் அரசனாகிய ஆல்டிமானே அவளை மணந்துகொண்டதாலும், ஆமானின் எண்ணம் நிறைவேறாததினாலும், இரண்டாவதாக மர்டோக்குக்கு ஆல்டிமான் மைத்துனனானதால் ஆமான் வேலைக்கே ஆபத்து வந்தபோதிலும் வரலாம் என்று பயந்தும் மர்டோக்கைவெறுத்து வந்தான்.

ஓர் நாள் அரசன் சந்தோஷமாயிருந்தகாலத்தில், சில துஷ்ட உத்தியோகஸ்தர் தங்களுக்கு பிரியப்படாதவர்களுக்கு விரோதமானவர்களை சிக்ஷிக்கும் காகிதங்களை நடுவில் புணர்த்தி கையெழுத்துவாங்கி, அது அமுலுக்கு வருங்கால் கையெழுத்திட்ட உத்தியோகஸ்தர்களே ஆந்தைபோல் விழிப்பதேபோல், யூதஜாதியாரெல்லோரையும் கண்டவுடன் பிடித்து விசாரணையின்றி கழுவேற்ற வேண்டுமென்று உத்திரவில் அரசனறியாது கையொப்பம் வாங்கினான். உடனே சந்தைப்பேட்டையில் ஓர் பெரிய தூக்குமரத்தை நாட்டி மறுநாள் காலையில் முதற்பலியாக மர்டோக்கையும், தன் இஷ்டத்திற்கு சம்மதியாவிடில் எஸ்தரையும் அரசனறியாமல் கழுவேற்றி விடுவதென்று மனப்பால் குடித்திருந்தான். தான் கொலுவிற்கு வந்து தன் எண்ணம் அரசனுக்குத் தெரிந்தால் எங்கே நிறைவேறாமற்போய்விடுமோ என்ற பீதியால் அன்று கொலுவிற்கு வரவில்லை.

மர்டோக் தூக்குமரத்தைப்பற்றி விசாரித்ததில் அது யூதர்களுக்காக நாட்டப்பட்டமையை ஓர் விதமாய் அறிந்ததும், உடனே தன் தங்கையிடம் சென்று அவ்வுத்திரவை மாற்றும்படி அரசனிடம் வேண்டிக்கொள்ளும்படி சொன்னான். தான் தன் வேதத்திற்காக உயிரைக்கொடுக்கும் பாக்கியம் கிடைத்தால் சொல்லொண்ணா சந்தோஷப்பட்டாலும், சகலரும் இறப்பதென்றால் அவர்மனம் தாளவில்லை. "கொடுங்கோல் மன்னன் வாழும் நாட்டைவிட கொடும்புலி வாழும் காடுநலம்'' என்றறிந்திருந்தார்.

ஆனால் அரசர் தன் மனைவியை சந்திக்கும் பொழுது சொல்லலா மென்றால் காரியம் மிஞ்சிவிட்டாலும் விடலாமென்று பயந்தார்கள். எனினும் அரசர்தர்பாரில் உத்திரவின்றியார் உள்ளே நுழைந்தாலும் உடனே உயிரை இழக்க வேண்டுமென்ற அநாகரீக சட்டம் அந்த நாட்டில் பரவியிருந்தது. ஒன்றில் தன்னுயிரை இழக்கவேண்டும். இல்லையேல் தன் இனத்தவர் யாவரும் மரிக்க வேண்டும் என்று தெற்றென புலப்பட்டது. எஸ்தர் அஞ்சாத நெஞ்சம்படைத்த தியாகி. மாதர்களின் திலகம். கற்பினணிகலம். பொறையின் முத்தி. தான் அரசன் கொலுவிற்சென்று தங்கள் ஜாதியாருக்கு ஏற்பட்ட இன்னலை தீர்க்க மன்றாடுவதென்றும், அரசனுடைய கடமையை மறந்தும்,

"தன்னது மக்கள் நோயைத் தவிர்த்திட மருந்தளிக்கும்,
அன்னையே போலவேந்தன் ஆனதன் குடிகட்கென்றும்
இன்னலை நீக்குதற்கே இயற்றுவன் விதிகளெல்லாம்
அந்நிலை உணராதானை திருத்தவே எஸ்தர் சென்றார்"

அரசன் தர்பாரில் உத்திரவின்றி திடீரென நுழைந்து அவன் சிம்மாசனத்தின் பாதத்தில் விழுந்தாள்.

அரசன் பழயரிக்கார்டுகளை பரிசோதனை செய்துவருங்கால் ஓர் காலத்தில் அரசனுக்கு விரோதமான சதியென்று தூண்டப்பட்டு, அதை மர்டோக் தன் உயிருக்குத் துணிந்து கஷ்டப்பட்டு அரசனை காப்பாற்றியதாயும் அதற்கு தக்க சன்மானம் ஒன்றும் கொடுபடவில்லை யென்றும் அறிந்தான். உடனே அதற்கு தக்க சன்மானம் செய்யத் தீர்மானம் கொண்டான்.

இந்நிலையில் ஓர் யௌவன மாது தன் பாதார விந்தத்தில் உத்திரவின்றி நுழைந்து தண்டனிடவும், விரோதியோ என்று உருவின உடைவாள் அப்படியே நிற்க, அவளை யாரோ வென்று நினைத்து "சிங்கத்தின் குகையிலே சிங்கத்தை எதிர்க்க உனக்கு என்ன தைரியமடி? நீயார்" என்று குனிந்து நோக்கினான். "உன் உயிரை நீயே மாய்த்துக்கொண்டாய்" என்று அதிகார தோரணையில் கர்ஜித்தான். ஆனால் அவள் கண்ணீரும் கம்பலையுமாய் நின்ற

தைக் கண்ணுற்று "பெண்ணென்றூற் பேயும் இறங்குமன்றோ" "எழுந்திரு" என்றான். குப்புறவிழுந்து அவன் சிம்மாசனத்தைப் பிடித்திருந்த எஸ்தர் எழுந்து நின்றார். இருவர் கண்களும் சந்தித்தன. "ஆ என்னருமை எஸ்தர். உனக்கு நேர்ந்த துக்கம் யாது" என வினவினான். அவளைத் தன் அருகாமையில் ஆசனமீதமர்த்தி தன் கைலேஞ்சால் அவள் கண்ணீரைத் துடைத்துத் தேற்றினான். அவள் வாய்திறவாமுன் மர்டோக்குக்குத் தான் மரியாதை செய்து உலகறியவாழ்த்தும்படி அவர் செய்த காரியங்களைச் சொன்னான். இதைக்கேட்ட எஸ்தர் அவருக்கும் தன் இனத்தாருக்கும் ஆமான் நாட்டியிருக்கும் கழுவைக் காண்பிப்பதாகச் சொன்னாள். அரசன் ஆமானைத் தன்னிடம் வரவழைத்து எஸ்தரை மவுனமாக இருக்கும்படி சைகை செய்தான். ஆமானை ஆசனமீதிருத்தி வினவலானான். "எனக்கு உயிர்ப்பிச்சை தந்து என்னுயிருக்கே அவசியமான தைரியத்தை தரும் என் நண்பர் ஒருவருக்கு செய்யத்தகுந்த மரியாதை என்ன" என்றான்? ஆமான் தன்னைப்பற்றித் தான் அரசன் மறைபொருளாய் கேட்கிறார் என்று இருமாந்து, அப்பேர்ப்பட்ட மகானுபாவனை பட்டத்துக் குதிரைமேலேஏற்றி அரசாங்கத்தின் முதல் உத்தியோகஸ்தர் கடிவாளத்தைப் பற்றிக்கொண்டு தெருத்தெருவாய் சுற்றி வர வேண்டுமென்றும், அவர் முன்னால் வித்வான்கள் அவர் மகிமையைப்பாடிவரவேண்டுமென்றும் வாயில் ஜலம்ஊற உற்சாகமாய்க் கூறினான். அரசன் "சபாஷ். மர்டோக் நமக்கு இவ்வித உதவி செய்திருக்கிறான். நீர் சொல்லியபடி மரியாதை செய்யும் என்று சொன்னான். "வினை விதைத்தவன் வினை அறப்பான். தினை விதைத்தவன் தினை அறுப்பான்" என்பது விசிதமாயிற்று. மறுநாள் காலை வெகு ஆடம்பரத்துடன் மர்டோக் ஊர்வலமாய் அழைத்துவரப்பட்டார். மற்றும் நாள் காலை ஆமான் நட்ட கழுமரத்தைப் பெயர்த்துவிட ஆட்கள் சென்ற பொழுது ஆமான் அதேமரத்தில் பிரேதமாய் நாண்டுகொண்டு தொங்கியிருந்தான். "கேடுவரும் பின்னே மதிகெட்டுவரும் முன்னே" என்றபடியும் "பிறருக்கு வெட்டின குழி தனக்கே என்றபடியும்" ஆமான் தன் துர்க்கிருத்தியங்களின் பலனை அடைந்தான்.

அரசன் தன்மனைவியின் மற்றகுணங்களுடன் "பிறனுயிர்

காக்கத் தன்னுயிர் கொடுக்க" முன்வரும் தியாகத்தைக் கண்டா னந்தித்து எகிப்திய வீர திலகத்தைத் தனக்கு பாரியாக அளித்த எல்லாம்வல்ல எம்பெருமானை துதித்துத் துதித்து மகிழ்ந்தான். மர்டோக்கும் முதல் மந்திரியாகி கடவுள் அனுக்கிரகம் நிறைந்து பலருக்கு நன்மை செய்தார்.

"விற்பனர்க்கு வாழ்வுவந்தால் மிக வணங்கி
கண்ணோட்டம் மிகவும் செய்வார்
துர்ச்சனர்க்கு வாழ்வுவந்தால்
கண்தெரியா திருமாந்து துன்பம்செய்வார்
பற்பலர்க்கு வாழ்வுதரும் தண்டலையாரே
சொன்னேன் பண்பில்லாத
அற்பருக்கு வாழ்வு வந்தால்
அர்த்தராத்திரிக் குடைமேலாகுந்தானே."

'இந்திய மித்திரன்.'

விளம்பரஞ் செய்வோர்க்கொரு விசேஷச்செய்தி.

இந்தியர்களின் குடியேற்ற நாடாகிய மலாயாவில் "இந்திய மித்திரன்" என்னும் பெயருடன் பிரதி புதன்கிழமை தோறும் இரண்டாயிரத்தி ஐநூற்றி லதிகம் பிரதிகளாக வெளியாவதும், முழு மலாயாவின் எல்லாப் பாகங்களில் மட்டுமன்றி, இந்தியா, பர்மா, சிலோன், சயாம், ஜாவா, சுமத்ரா முதலிய வெளிநாடுகளிலும் விசேஷமாகப் பரவியுள்ளதும் மலாயாவிலிதற் கிணையில்லை யெனக் கொண்டாடும் கீர்த்திவாய்ந்தது மாகிய சிறந்த தமிழ்ப் பத்திரிகையில் விளம்பரஞ் செய்வோரே தமது வியாபார விருத்தியை உண்மையிற் கோருவோர்களும், உத்தேச பலனைப் பூரணமாயடையத் தக்கோருமாவார்கள். சந்தாதார்களாகச் சேருவோர்க்கும் சிந்தைகளிக்கத்தக்க செய்திகளனந்த முண்டு. வெளியூர் வருடசந்தா ரூபாய் 7—8—0 விளம்பர விகிதங்களுக்குக் கீழ்க்காணும் விலாசத்திற் கெழுதவும்.

மானேஜர், "இந்திய மித்திரன்."
ஈப்போ. (எப். எம். எஸ்.)

கோள் சொல்லல்.

(தென் ஆப்பிரிக்கா, டர்பன் சரஸ்வதி சபைத்தலைவர்
திரு. ச. முனிஸ்வாமிப் பிள்ளை அவர்கள் எழுதியது.)

உலகவின்பத்தைக் கெடுப்பவைகளுள் கோட்சொல்லல் ஒன்று. இக்குணம் எவ்விடத்தும் காணப்படுகிறது. கல்வியறிவிற்கும் இதற்கும் பொருத்தமில்லை. இது பழக்கத்தாலும், மனப்போக்காலும் ஏற்படுகின்ற துர்க்குணங்களில் மிக இழிவுடையது. இதற்கு யாரும் நிகரில்லை. சக்கிரவர்த்தியோ, ஏழையோ, அல்லது மகாஞானியோ, எவரும் இதிலிருந்து தப்புகிறதில்லை. மானத்தையும் பெருமையையும் விலக்கி எவ்விடமும் சென்று பெருச்சாளியைப்போல், இரவுகளில் மண்ணைத் தோண்டி புழுக்களைத் தின்று திருப்தியடைந்து வெளிச்சத்தில் மறையும் சுபாவமுடையது. உடன் அடைக்கப்படாவிடில் இப்பொந்தில் பாம் பினங்கள் நுழைந்து வசிக்கும்.

இதனல் வரும் தீமைகள் பலவுள. அத்தீமைகள் சொல்வோரையும் சொல்லப்படுவோரையும், துன்பத்திற்குள்ளாக்குகின்றன. ஷேக்ஸ்பியர் நாடகங்களிலொன்றில் "அயாகோ" என்ற கோட்சொல்லி "ஒதல்லோ" "டெஸ்டிமோனு" என்றவர்களின் மரணத்திற்குக் காரணபூதனுயினும் தானெருபயனையுமடையவில்லை. கோளைச்சொல்லி தக்க பதவியை யடைந்தவர் ஒருவருமில்லை. அவரின் கெட்ட குணம் வெளிவராதவரை, அவர் சில பயனை யடையினும், ஒரு சமயம் வெளிப்பட்டு (மறைக்கப்படுந் தன்மையல்ல) அவருக்குக் கெட்ட பெயரும், துன்பமும் கொடுமையாய்க் கிடைக்கின்றன. அப்போது பிடிபட்ட பெருச்சாளி கொல்லப்படுவது போலின்றி, ஒவ்வொரு நிமிஷமும் கொலை பண்ணப்படுகிறவன்போல் துயர் அடைகின்ருன். எவரைப்பற்றிச் சொல்லப்படுகின்றதோ அவர்படுந்துயரம் குறைவன்று. பெயர் மங்குகின்றது. வலிகுறைகிறது. மனப்பீடை இன்பத்தைத் தடுக்கின்றது. இவர் இளைத்தவராயின் அளவில்லாத நஷ்டமடைகின்ற

னர். பலமுடையராயின் அவ்விழுக்குத்தன்மை தாக்காவண்ணம் காப்பாற்றி சொல்பவரைத் தக்க சமயத்தில் இழுத்துப் பகிரங்கமாய் அவமதிப்படையுமாறு செய்வர்.

கோள்சொல்வ தெதனுலென விசாரிப்பது தகுதி. தந்நயமே இதற்கு முக்கியகாரண மெனினும், சிலவிடத்துப் பிறர் துன்பத்தைப் பார்த்துக் களிக்குமியல்பு காரணமெனலாம். கோள் சொல்பவர் பொதுவாய்த் தம்மில் உயர்ந்தவரையும், பலமுள்ளவரையும் பற்றி நிற்பதால், இதை நாமறிகிறோம். கோள்சொல்லும் இயல்பினன் பொதுவாய் எக்கொடுமைக்கும் அஞ்சாமல் சமயந் தோறும் வெவ்வேறு மனிதனுகத் தோன்றுகின்றான். இவனை நன்கு ஆராயின், பொருமை, துராசை, திருப்தியின்மை, பிறர் துன்பத்தில் சந்தோஷிக்குங் குணம் முதலிய அற்பத்தன்மைகள் பல அவனிடம் தோன்றும்.

இக்கொடுமையிலிருந்து தப்பும் வழி ஒன்றே அதாவது குற்றமென்று தெரிந்ததன் செய்கையை குற்றமென்றே ஒருவன் பகிரங்கமாய் ஒப்புக்கொள்ளவேண்டும். அவர் தம் குற்றத்தை நன்ருய் உணர்ந்து அவ்விதக்குற்றம் வாரதபடி நடப்பாராயின் அவருக்குச் சத்துருவில்லை. அப்போது அவரைக்கொண்டு எந்தக் கோட் சொல்லியும், ஒன்றும் சொல்லப்புகான். ஒருக்கால் அப் புல்லியன் இவரைக் கொண்டாடவும் கூடும்.

இவ்விழிவுக்குணம் வெகுநாளாய் நிலைத்திருக்கின்றது. சிரஞ்சீவிப்பட்டம் பெற்றிருந்தாலும் இதன் வலிகுறைய வழியுண்டு. இது மனிதபேதத்தாலுண்டாயது. பொதுவாய் கோள் கேட்பவர், சொல்பவரினும், சொல்லப்படுவரினும் கௌரவம் வாய்ந்தவர். ஆதலின் அவர் தம்மிடம் வரும் விஷயங்களை, அதினும் பிறரைப்பற்றிய குற்றங்களை மன்னிக்கும் பெருந்தன்மையையும், அவைகளின் உண்மையை யறியும் திறமையையும் வகிக்க வேண்டும். இவ்விரண்டும் அவசியமானவை. இல்லாவிடில் கேட்பவரே துயரமடைவர், இகழப்படுவர். இவர் புல்லரினும்புல்லராவர்.

உலகீர்! இக்கெட்ட விஷயத்தில் மனஞ்சென்றதைப் பற்றி மன்னிக்க.

பைந்தமிழுக்குத் தொண்டுபுரிந்த

பன்னிருசெல்வர்கள்.

பாற்கடலோன் தொகுத்தது.

சர்க்கரைப்பிரபு புலவர் எச்சில் வாய்கழுவியது.

சோழநாட்டு சிவஸ்தலங்களில் ஒன்றாயதும், சிவபெருமான் பேரன்புக்குரியராய் அறுபத்து மூன்று தனியடியார்களில் ஒரெண்பெற்று, 'அன்புபழுத்த நருங்கனி' என சைவசீலர்களால் போற்றப்பட்ட "காரைக்காலில்" கல்வி, அறிவு, கேள்வி, செல்வம், புகழ், சிறப்பு, பொறுமை முதலியவற்றால் மிக்குயர்ந்த "சக்கரைப்பிள்ளை" என்னும் பெரிய பிரபு ஒருவர் பிரபலமாய் வாழ்ந்திருந்தார். அவர் பொறையையும், புலவர்பால் கொண்டுள்ள பேரன் பினையும், புவியினர்க்குணர்த்தி அதன்மூலம் அவர் கீர்த்தியை எங்கும் பரவச்செய்ய வேண்டுமென்ற நன்னோக்கங் கொண்ட புலமைமிகும் புலவர் ஒருவர், ஒருநாள் பிள்ளையவர்கள் மாளிகைசேர்ந்து அவரை 'அணுகி' ஐயா! தாங்கள் எம்மைப் பற்றிப் பிறரிடம் இகழ்ந்து ஏசியதாகக் கேள்விப்பட்டோம்; பிரபுக்களானோர், புலவர்களைப் போற்றிக்காத்து அவர்களை வாய் கொண்டமட்டும் புகழ்ந்து பாராட்டுதல் வழக்கம்; அதிலும், தாளாளரென்னும் வேளாண் செல்வர்கள், புலவர்களைப் போற்றிப் புகழ்தலில் மிகுதியும் அன்புடையவர்கள். அத்திருமரபிற் றோன்றிய தாங்கள் அதற்கு மாறாக விருப்பதென்னையோ 'வென்று வினவினர்?' பிள்ளையவர்கள், இயல்பாகவே பொறுமையை அணிகலனாகக்கொண்டவர். சாந்தமும் சன்மார்க்க நடையையும் உடையவர். பிறரைப் பழித்தலென்பது இவருக்குப் பழக்கமற்றதாயுமிருந்தது. பிறரைத் தூற்றியும் அறியார். இத்தகைய சீலர், புலவர்வாய்ச் சொற்கேட்டுத் திடுக்குற்றவராய் அப்புலவரை நோக்கிப் புலமைப் பெரியீர்! இது மிகவும் பொய்க் கூற்று. ஒருவர்மீதொருவர் கோள்மூட்டிப் பகைமையை விளைவிக்

கும் குண்டுணிகளின் விபரீதசெயல். தாங்கள் இதனை மெய்யெனக் கொள்ளாதீர்கள். இங்ஙனம் கூறும் எனது மொழியில் தங்களுக்கு நம்பிக்கையில்லையாயின், தாங்கள் விரும்புகின்ற எத்தகைய உறுதியையும் செய்துகொடுக்கத் தவறேன் என்றனர். புலவர், பிரபுவைப் பரீட்சிக்கவந்தவரானதால், அவரைநோக்கி, 'தங்கள் சொல்லில் எமக்கு நம்பிக்கை தோன்றவில்லை; தாங்கள் பழுக்கக் காய்ச்சி நெய்யில் கையைத்தோய்த்துச் சத்தியஞ்செய்தால் நாம் நம்புவோம்' என்று மொழிந்தனர். பிள்ளையவர்கள் தமது மனதில் களங்கமில்லாததனாலும், தூய உள்ளத்தினரிடத்துத் தீக்கடவுளுக்குப் பரிவுதோன்றி சுடார் என்று உறுதியிருந்ததனாலும் பிரமாணம் செய்துதருவதாக ஒப்புக்கொண்டார். சிறிது நேரத்திற்குள் நெய்காய்ந்து கொதித்துக்கொண்டிருந்தது. ஊரார் பலரும் இதுபார்க்கத் திரண்டுகூடினார்கள். பிள்ளையவர்கள் பலரும் பார்க்கப் பழுக்க காய்ந்த நெய்ப்பாத்திரத்தில் தமது வலகையைத் தோய்த்து எடுத்தனர். அதனால் யாதோர் தீங்குக்கும் உள்ளாகாது சந்தோஷமாகவேயிருந்தனர். பிரபுவின் உறுதியையும், பொறுமையையும் கண்டார் யாவரும் அதிசயித்துக் களிபேருவகை யெய்தினர். புலர் தமது கருத்து நிறைவேறியதற்கு மெத்தவும் சித்தங்களித்துப் பிள்ளையவர்களை மிகுதியும் பாராட்டிக் கவியொன்று பாடினர். அக்கவி அடியில்வருமாறு:—

"மகிழ்ந்துகா ரைப்பதியில் வாழ்சர்க் கரைதான்
புகழ்ந்து திரிபுல வோரை—இகழ்ந்து நான்
வையவில்லை யென்று சொல்லி மண்டலமெலாந்துதிக்க
நெய்யிலே கையைவிட்டா னேர்ந்து"

பின்னர், பிரபுவும், புலவரும் ஓரிடத்திருந்து உணவருந்திக் கையலம்ப எழுந்தபோது புலவர், பிள்ளையவர்கள் அன்பை மேலும் சோதிக்க நினைந்து, அவரைநோக்கி, 'பெருந்தகையீர்! தமிழ்பாடும் பாவாணரிடத்துத் தங்களுக்கு மெய்யன்பும், ஆர்வமும் இருப்பது உண்மையாயின், எமது எச்சில் வாயைக்கழுவும் பார்ப்போம்' என்றார்.

இயல்பாகவே பிள்ளையவர்கட்குத் தீஞ்சுவை நிரம்பிய செந்தமிழ்பாலும், அதனை முறையாய்க் கற்றுத்தேர்ந்த கவிவலாரிடத்

துக் கரைகடந்த பேரன்புபெருகியிருந்ததனுலும் தாம் யாதோர் தடையும் கூருது புலவர் விரும்பியவாறு அவர் தம் எச்சில்வாயை நன்ருய்க் கழுவி மகிழ்வித்தனர். "அன்புக்கு முண்டோ! அடைக் குந்தாள்"

மேற்காட்டிய சம்பவம் கொங்குநாடு அல்லது கொங்குமண்டலத்தில் கோயமுத்தூர் ஜில்லாவில் காங்கேயத்திற்கு அடுத்தும் 'பழையகோட்டை,' 'ஆணூர்' என்னும் சிற்றூர்களுக்கு ஒட்டியதுமான 'நத்தக்காரையூரி'ல் நிகழ்ந்ததாகவும், இந்நிகழ்ச்சிக்கு உரிய வேளாண் செல்வர் பெரும் பிரபுவென்றும், அவர் பெயர் 'சம்பந்த சர்க்கரை' என்றும், அவரைக் காய்ந்தநெய்யில் கையிட்டுச் சத்தியஞ் செய்யச் சொல்லியும், தமது எச்சில்வாயைக் கழுவவும் சொன்ன புலவர் 'வீரபத்திரன்' என்னும் பெயரின ரென்றும், அவர்குலம் ஏகாலியர்குலம் என்றும், ஊர் கொங்கேழ் சிவஸ்தலங்களில் ஒரெண்ணையுடைய 'திருச்செங்கோடு' என்றும் 'கொங்கு மண்டல சதகம்' கூறுகின்றது. தங்கூற்றுக்கு ஆதாரமாக:—

"முகஞ்சோர்ந் தகன்றிடும் ஏகாலிப்பாவலன் முன்னநின்றே
யிகழ்ந்தே னிலையைய வென்று சுடுநெய்யினிற் கையைவிட்
டுகந்தே யுணுமெச்சில் வாயைக் கழுவி யுவப்பியற்றி
மகிழ்ந்தே புகழ்பெறு சர்க்கரையுங் கொங்குமண்டலமே"

என்ற சதகப்பாட்டையும், அதற்கு மேற்கோளாக,

"தூசர்குல வாணனுக்கோர் சோர்வுரைக்க வில்லையென
நேசமுட னேகாய்ந்த நெய்யதனிற் கையைவிட்டோன்"

என்ற செய்யுளையும் குறிப்பிட்டுள்ளது.

(ஆராய்ச்சி.) (நல்லதம்பி சர்க்கரை-காதல்)

காரைக்கால் சர்க்கரைப்பிள்ளை யவர்களே இச்சம்பவத்திற் குரியாரென்று அறிஞர்கள் ஏட்டில் எழுதியும், பிரசங்கவாயிலாக எடுத்தியம்பியும் வருகின்ருர்கள். மதுரைச் செந்தமிழ்ப் பத்திரிகை மூன்ரும் தொகுதி இருபத்திரண்டாம் பகுதியில், சேற்றூர் சம்ஸ்தான வித்துவான் மு. ரா. கந்தசாமிக் கவிராயர் மூத்த சகோதரர் மு. ரா. அருணசலக்கவிராயர் அவர்கள் எழுதியிருப்பதும், பிரமோதூத வருஷம் கார்த்திகை மாதம் 12-தேதி வியாழக்கிழமை சிதம்பரம், அண்ணமலை சர்வகலாசாலையில் மன்னர்குடி திரு சர்க்கரை இராமசாமிப்புலவர் அவர்கள் 'தமிழ்த் தொண்டு' என்னும் தலைப்பில் செய்த சொற்பொழிவில் கூறியிருப்பதும் இதற்கு உதாரணங்களாம். இவ்வுதாரணங்களால் மேற்குறித்த சம்பவம் சோழநாட்டுக் காரைக்காலில் நிகழ்ந்ததாகக் கொள்ளலாமே யன்றிக் கொங்கு நாட்டு ஆணூரில் நிகழ்ந்ததாக கொள்ளுதற்கில்லை.

மாணவரின் முதல் வேலை.

(மகாத்மா காந்தி)

மாணவர்களுக்கும் எனக்கும் நெருங்கிய சம்பந்த மேற்பட்டிருப்பது நான் செய்த பாக்கியமேயாகும். எனக்குக் கிடைக்கும் கடிதங்களில் பெரும்பாலானவை மாணவரிடமிருந்தே வருகின்றன. உலகிலுள்ள மூலை, முடுக்குகளிலிருந்தும் மாணவர்கள் எனக்குக் கடிதமெழுதுகிறார்கள். தங்கள் சந்தேகங்களை விளக்கித் தங்களுக்கு வழி காட்டுமாறு என்னைக் கேட்டுக்கொள்ளுகிறார்கள். மாணவர்களின் வாழ்க்கையைச் சீர்திருத்த என்னாலியன்ற வரையில் நான் உழைத்து வருகின்றேன். ஆண்டவன் இன்னும் சில வருஷங்களுக்கு என்னை உயிருடன் வைத்துக் கொண்டிருக்க விரும்புவனானால், இந்தத் தொண்டில் யான் வெற்றியைக் காண முடியுமென எண்ணுகிறேன்.

பொதுவாக உலகிலுள்ள மாணவர்களும், சிறப்பாக இந்தியாவிலுள்ள லக்ஷக்கணக்கான மாணவர்களும் தங்கள் உள்ளத்திலே எனக்கோர் உறைவிட மளித்திருப்பது கண்டு நான் மிக்க சந்தோஷப்படுகிறேன். ஆயினும் நான் உண்மையாகச் சந்தோஷப்படக்கூடிய காலம் இன்னும் வரவில்லை. தங்கள் பள்ளிக்கூடங்கள் அல்லது கல்லூரிகளில் படிப்பதுதான் படிப்பு என்றும், அவற்றை விட்டு விட்ட உடனேயே படிப்பு முடிந்து விடுகின்றதென்றும் தற்கால மாணவர்கள் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். மாணவனின் படிப்பு பள்ளிக்கூடத்தையோ, கல்லூரியையோ விட்டதும் முடிந்துவிடவில்லை. இந்த இடத்தில் எனது சொந்த அனுபவத்தை நான் சொல்லுகிறேன் கேளுங்கள். நான் பள்ளிக்கூடத்தை விட்டு வெளியே வந்ததற்குப் பிறகு கற்றுக்கொண்ட விஷயங்களில் பத்திலொருபங்குகூட நான் பள்ளியில் கற்றுக்கொள்ளவேயில்லை. மாணவப் பருவம் என்றால் விஷயங்களை யறிந்து கொள்ளும் பருவம் என்ப் பொருள். உண்மையான இந்த மாணவப்

பருவம் ஒவ்வொருவருக்கும் அவரவர் பள்ளிக்கூட வாழ்க்கையை முடித்துக்கொண்ட பின்புதான் தொடங்குகின்றதென்பது எனது அபிப்பிராயம். வாழ்க்கையில் அதிகமாக அடிபட்டிருக்கும் நான் சொல்லுவதை மனதில் கொள்ளுங்கள். வெறும் புத்தகப் படிப்பு உங்களது பிற்கால வாழ்க்கைக்குக் கொஞ்சம் கூடப் பயன்படவே படாது. ஒரு வண்டி புத்தகங்களை வைத்துக்கொண்டு அவற்றி லுள்ள விஷயங்களை நெட்டுருப் போட்டுப்போட்டு மூளையில் திணித்துக்கொண்டதால் பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் ஒன்றுக்கும் உதவாதவர்களாக ஆய்விட்டார்கள் என்பதை நானறிவேன். சிலருக்கு மூளையே கெட்டுப்போய் விட்டது; இன்னும் சிலருக்குப் வைத்தியம் பிடித்துவிட்டது; வேறு சிலர் திக்கற்ற நிலைமையிலிருந்துகொண்டு அசுத்தவாழ்க்கையை நடத்து கின்றனர். பிசாசு பிடித்துவிட்டால் அதை லேசில் விரட்ட முடியுமா?

ஆகவே "என்ன முயன்றாலும் நாங்கள் முன்னுக்கு வர முடியவில்லையே" எனக் கதறும் மாணவர்களைக் கண்டால் என் மனம் உடைந்து போகின்றது. "எங்களைப் பிடித்துள்ள பிசாசை நாங்கள் என்னமாக ஓட்டமுடியும்? எங்களைப் பிடித்துள்ள அசுத்தத்தை நாங்கள் என்னமாகப் போக்கமுடியும், கொஞ்சம் வழி சொல்லுங்களேன்" என்று. மாணவர்கள் என்னைக் கேட் கின்றனர். ராம நாமத்தைப் பற்றுங்கள், ஆண்டவன் முன்னர் முழந்தாளிட்டுப் பணியுங்கள், அவனது துணையை நாடுங்கள் என நான் சொன்னால் அவர்கள் என்ன சொல்லுகிறார்கள் தெரியுமா? "கடவுள் எங்கிருக்கிறாரென்பதே எங்களுக்குத் தெரியவில்லை. என்னமாக அவரை வணங்குவ தென்றும் தெரிய வில்லையே" என்கிறார்கள். இந்தத் தற்காலப் படிப்பு அவர்களை இந்நிலைக்குக் கொண்டுவந்து வைத்துவிட்டது. பேய்ப் படிப்பு படித்தால் பேய்ப் புத்தி தானே வரும்?

ஆதலால் தான் தாங்கள் படிக்கும் புத்தகங்கள் சரியானவை தானா என்று மாணவர்கள் பார்த்துக்கொள்ள வேண்டுமென நான் சொல்லுகிறேன். அச்சு ரூபத்தில், அட்டைபோட்டு தைக்கப்

பட்டுள்ள எதையும் புத்தக மென்று கொள்ளக்கூடாது. மனிதனின் பரிசுத்த வாழ்க்கைக்கு எவை துணை செய்யுமோ அவை தான் புத்தகங்கள். ஏனைய புத்தகங்களாகா.

கைக்குக் கிடைக்கும் புத்தகங்களை யெல்லாம் மாணவர்கள் படிக்கக் கூடாது. மாணவரின் ஹிருதயங்களை நல்வழிப்படுத்துமாறு நான் ஆசிரியர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். ஆசிரியரின் ஹிருதயங்களுக்கும், மாணவரின் ஹிருதயங்களுக்கும் தொடர்பிருத்தல் வேண்டும். மாணவர்களை நல்வழிப் படுத்தும் வேலையை பள்ளிக்கூட அறைக்கு வெளியேதான் ஆசிரியர்கள் செய்யமுடியும். ஆனால் இந்தக் காலத்தில் கூலிக் காகவே ஆசிரியர்கள் வேலை செய்கிறார்கள்; குமாஸ்தா வேலைக் கே மாணவர்கள் படிக்கிறார்கள். இந்நிலையில் உண்மையான கல்வி இந்நாட்டில் பரவுவ தெங்ஙனம்? மாணவர் வாழ்க்கை தூய்மை யாவது எப்படி?

ஹிருதயங்களைப் பரிசுத்தப்படுத்திக் கொள்வதே மாணவரின் முதல் கடமை. ஏக்கம், ஏமாற்றம், அதைர்யம், அச்சம், கர்வம், கோபம் என்பவை மாணவர் அகராதியிலிருக்கவே கூடாது. நீங்கள் மனத் தூய்மையுடன் விளங்கினால் தான் ஆண்டவன் உங்கள் உள்ளத்தில் வாசம் செய்வார். கர்வங்கொண்டவனின் பிரார்த்தனைக்கு ஆண்டவன் இணங்கமாட்டார். எவன் உண்மை பக்தனோ, எவனிடம் சத்தியமும், தர்மமும் துலங்குகின்றனவோ அவனது பிரார்த்தனைக்கே ஈசன் இணங்குவார். கடவுள் நமக்குத் துணைபுரிவார் என்ற நம்பிக்கை உங்களிலே வேரூன்றி யிருந்தால் தான் அவரது உதவியை நீங்கள் அடைய முடியும். அகத் தூய்மையே ஆண்டவன் விரும்புவது. ஆகவே மாணவனின் முதல் வேலை தன்னைத்தூய்மைப்படுத்திக் கொள்ளுவது தான்.

"சுதந்திரச் சங்கு"

தமிழ்நாடு, பர்மா, சிலோன், மலேயா, சுமத்திரா, டர்பன், செய்கோன் முதலிய இடங்களில் 5000 சந்தாதாரர்களையுடைய 'நவமணிக்கு' நீங்கள் விளம்பரங் கொடுக்கவில்லையா? வியாபாரிகள் உடனே விளம்பரம் அனுப்பிப் பயன்பெறுதல்நலம்.

மணியொளி.

புதிய நிர்வாகம்.

பிரிட்டிஷ் கவர்ன்மெண்டின் நிர்வாகத்தை இதுகாறும் நடத்திவந்த தொழிற்கக்ஷி கவர்ன்மெண்ட் பல்வேறு காரணங்களால் மாற்றப்பட்டு இப்பொழுது பிரிட்டிஷ் பார்லிமெண்டிலுள்ள முக்கக்ஷிகளின் பிரதிநிதிகளுங் கொண்ட கூட்டுக்கக்ஷிக் கவர்ன்மெண்ட் நிர்வாகப் பொறுப்பேற்று பிரிட்டிஷ் அரசியல் நடைபெற்று வருகின்றது. இப்புதிய கவர்ன்மெண்டின் தலைவரும் பழைய தொழிற்கக்ஷித் தலைவரான ராம்ஸே மாக்டொனல்டவர்களே யாகும். இப்பெரியார் தமது கக்ஷிக் கவர்ன்மெண்டகலையுந் தறுவாயில் தமது கக்ஷி இருந்த நிலை கண்டவுடன் அதற்கு வேண்டியன செய்யாமல் புதிய கவர்ன்மெண்டில் தலைமைப் பதவி ஏற்க சம்மதி பெற்றவுடன் தொழிற்கக்ஷியில்கூட சிறிது பிளவேற்பட்டுவிட்டதாகத் தெரிகிறது. அங்கிலையில் புதிய நிர்வாகத்தில் ஒரு முக்கிய மாறுதல் ஏற்பட்டுள்ள தென்ன வென்றால் இந்தியாவைப் பொருத்தவரை இந்தியா மந்திரியாக முன்னிருந்த திரு. பென் மீண்டும் அப்பதவியை ஏற்க மறுத்துவிட்டார். அன்னவர் நிர்வாககாலத்தில் இந்தியாவிற்குச் சிறந்த ஒரு பேருதவியைச் செய்துவிடவில்லையாயினும், இந்தியர்களை சமாதானத்துடன் நடத்துவதில் இந்தியர்களுக்குச் சாதகமான முறையில் பல பொறுப்புள்ள வேலைகளைச் செய்யப் பெரும் உதவியாளராக விளங்கினர். அவர் இப்பொழுது மீண்டும் இப்புதிய நிர்வாக சபையில் ஓர் ஸ்தானம்பெற விரும்பவில்லை. இங்கிலையில் இப்பொழுது இந்தியா மந்திரியாகவுள்ள ஸர். ஸாமுவேல்ஹோர் என்பவரைப்பற்றி உங்களுக்குச் சந்தேகம் வேண்டுவதில்லை. முதலாவது வட்டமேஜை மஹாநாட்டில் சந்தர்ப்பம் கிடைத்த பொழுதெல்லாம் இந்தியாவைத் தாக்குவதில் இவர் பின்னடையவில்லை. இப்பெரியார் இப்பொழுது நமது தாய்நாட்டின் தலைமைப்

பதவியை ஏற்றுள்ளார். இவரின் நிர்வாகத்தில் இந்தியா எங்நிலை யுறப்போகிறதோ?

பள்ளத்தூர் மறியல்.

பள்ளத்தூரில் டாக்டர். எஸ். என். நாயரின் தலைமையில் தேசிய சபையின் சம்மதியில்லாமல் தனித்த முறையில் கள்ளுக் கடை, சாராயக்கடை மறியல் செவ்வனே நடத்தப்பட்டு வந்த தென்பதை முன்னரே நவமணியில் வாயிலாக யாவரு மறிவர். அம்மறியலில் சில பழக்கப்படாத வாலிபத் தொண்டர்களை வைத்து மறியல் செய்தார்கள். அவரும் பழக்கமற்றவர் என்ற ஒரு குறை தவிர எவ்வித குறையு மில்லாமல் மறியல் செவ்வனே நடைபெற்று வந்தது. அம்மறியலை நடத்திய டாக்டர் நாயர் அவர்கள் பால் உள்ளூர் ஊரார்களைச் சேர்ந்த சிலருக்கு இருந்த குரோதம் காரணத்தால் அந்நவர் மறியலில் சில பலவந்தச் செயல் செய்ததாகப் புகார்செய்து இருட்டுவேளையில் அந்நவரின் இல்லத்தில் சில துர்ச்செய்கைகளும் செய்ததல்லாமல், மறியல் செய்து கொண்டிருக்கும் பொழுது சிலர்கள் அவரையும் இன்னும் இருதொண்டர்களையும் நன்குக அடித்தது மன்னியில் தொண்டர்களையும், தலைவரையும் ஏசியதாகவுந் தெரிகிறது. இதுஎவ்வளவு கொடிய செயல் பாருங்கள். இது பற்றித் தலைவர் நாயர் போலீஸில் ரிப்போர்ட் செய்தாராம். அவர்கள் இதுவரை ஏதும் தக்க நடவடிக்கை எடுத்துக்கொண்டதாக நமக்குத் தெரியவில்லை. ஆனால் மறியலைப் பற்றிய வரை ஒழுங்கு முறையுடன் மறியல் நடப்பதை உள்ளூர் போலீசாரும் ஆப்காரி உத்தியோகஸ்தர்களும் நன்கு பலமுறை நேரில் பார்த்துள்ளார்கள். அவர்கள் மறியலுக்கு விரோதமாக ஒருவித நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளாதிருப்பதிலிருந்து மறியல் செவ்வனே நடப்பதன் உண்மை தெரியும். இங்நிலையில் தேசத்திற்குத் தொண்டுசெய்யும் உத்தேசத்துடன் கடவுளையே நம்பி இராப்பகல் வெயிலினும் மழையினும் நின்று குடிப்பவரைத் தடுக்கும் நிரபராதிகளான சாத்வீகத் தொண்டர்களை எவரும் அடிப்பதும் தனித்தமுறையில் அவர்கள் செல்லும் பொழுது அக்கிரமமாக நடந்து கொள்ளுவதும் கொஞ்சமும் நீதியற்ற

விஷயம். இப்பெரும் பழியை ஏற்றுக்கொண்ட பள்ளத்தூர் வாசிகள் பால் இறக்கங்கொண்ட நாம் நிரபராதிகளான தொண்டர்கள் பால் மீண்டும் இத்தியாதி தீச்செயல் நேராவண்ணம் அத்தீச்செயல் செய்தவர்கள் தங்களைத் திருத்திக்கொள்ளுதல் நலமென வற்புறுத்துகிறோம்.

போற்றுதற்குரிய உதவி.

தேவகோட்டையில் நடைபெறும் மதுபான மறியலை ஆதரித்து அவ்வூர் யூனியன் போர்டார் அம்மறியலை நடத்துவதற்கு நன்கொடையாக ரூபாய் முன்னூறு உதவியதாகத் தெரிகிறது. இது பெரிதும் போற்றுதற்குரியது. இப்பகுதி நகரசபைகளும் கிராமப் பஞ்சாயத்து சபைகளும் மறியலைக் கண்டிப்பதுடன் அச்சபைகளைச் சேர்ந்தோர் சிலர் சில இடங்களில் மறியலுக்கு விரோதமாகவும் நடந்துகொள்ளும் இந்த வேளையில் தேவகோட்டை நகரசபையாரின் இச்செயல் இப்பகுதி நகாசபைகளுக்கு ஓர் வழிகாட்டியாக உள்ளது. இது கண்ட பின்பேனும் ஏனைய நகரசபைகளும் அவ்வூரிலுள்ள மதுபானக்கடைகளை அறவே ஒழிப்பதற்குத் தக்க உதவி எல்வாவகையிலுஞ் செய்யுமென எதிர்பார்க்கிறோம்.

புதிய அச்சுச்சட்டம்.

பத்திரிகை சுதந்தரங்களில் தலையிட்டு அவைகளை அடக்க இப்பொழுதே பல்வேறு கண்டிப்பான சட்டங்கள் உள்ளதான போதிலும் சத்தியாக்கிரஹ யுத்தகாலத்தில் முந்திய வைசிராய்ப் பிரபுவால் இரு கொடிய அவசர அச்சுச்சட்டங்கள் தோற்றுவிக்கப்பட்டன. அவை சமாதானகாலத்தில் பட்டொழிந்தன. இங்கிலையில் சமாதானம் நிலவியுள்ள இக்காலத்தில், இந்தியா சுதந்தரமடையப்போவதாக எல்லோரும் எதிர்பார்க்கும் இவ்வேளையில், பிரிட்டிஷார் வலிய சுதந்தாமளிக்கப் போகின்றூர் எனப் பலர் கனவுகாணும் இச்சமயத்தில் உள்ள அடக்கு முறைச் சட்டங்களைவிடப் பத்திரிகைகளின் சுதந்தரங்களில் தலையிடப் புதிய சட்டமொன்று இந்தியா சட்டசபையில் வரப்போகிறது. அச்

சட்டப்படி கொலைசெய்வதையோ பலாத்காரக் குற்றங்களேதை யுஞ் செய்வதையோ, தூண்டுவதையோ அதை ஆதரிப்பதையோ அல்லது அச்செயல்களைப் புரிந்தவரையோ, அவர் செய்தது உண்மையாயினுங் கட்டுக்கதையாயினும் ஆதரிப்பவையான கட்டுரைகளை எழுதிய பத்திரிகைகளுக்கும் அதை வெளியிடும் அச்சுக்கூடங்களுக்கும் இனித் தொந்தரவு ஏற்படும். இப்புதிய சட்டப்படி இனிப் புராண சம்மந்தமான நீதிக்கதைகள் எழுதுவதாயினும் ஜாக்கிரதையாக எழுதப்படவேண்டும் போலும். பகதத் சிங் போன்ற வீரர்களை ஆதரிப்பதும் தவறுதலாகும். அல்லாமல், நிரபராதிகள் சிலர் பேரிலும் எதிர்வழக்காடாத காரணத்தால் பலாத்காரக்குற்றஞ் சாட்டப்படுவதைக் கண்டிப்பதும் குற்றமாகும் போலும், என்னே! இப்புதிய சட்டத்தின் நோக்கம். இது சமாதானத்தை நிலவச்செய்யும் இக்காலத்திற்குச் சிறிதும் ஒவ்வாத சட்டமென நாம் கருதுதல் தவருகாது.

எங்கும் பயம்.

மஹாத்மாஜீயைக் கப்பலேற்றி யனுப்பிவிட்டுச் சமாதான நிபந்தனையைக் காப்பாற்றுவதில் நாங்கள் சிரத்தையுள்ளவர்கள் எங்களை நம்பலாம் எனச் சொல்லும் புதிய வைசிராய் வில்லிங்டன் பிரபுவின் தலைமையில் நடைபெறும் இவ்விந்திய அரசாங்கச் சில்லரை தேவதைகள் மூலைமுடுக்குகளில் செய்யும் அட்டகாசங்களை நோக்கினல் எங்கும் பயமேற்படக் காரணமாக உள்ளது. மஹாத்மாஜீ கப்பலேறியதன் பின் சாத்வீகமறியல் செய்த தொண்டர்கள் பலர் பலவிடங்களிலும் தண்டிக்கப்படுகின்றனர். கொடித் திருநாளன்று அநேக இடங்களில் 144 சட்டப் பிரிவு அதிகாரிகளால் பிரயோகிக்கப்பட்டுள்ளது. பல தேசபக்தர்கள் பலவித காரணங்களால் தண்டிக்கப்படுகின்றனர். புதிய அடக்கு முறைச் சட்டங்கள் தோன்றுகின்றன. இதையெல்லாம் நோக்கும்பொழுது சமாதானம் பேசுவதாகச் சொல்லி மஹாத்மாஜீயைக் கப்பலேற்றி யனுப்பிய நிர்வாகிகளின் மனதில் கிஞ்சிற்றேனும் மாற்றம் உள்ளதாக நாம் காண இடமே யில்லாதிருக்கிறது. இந்நிலையில் பலவித அடக்குமுறைகள் ஏற்பட்டால் சமாதானம் வீண் பேச்சளவில் தான் நிற்கிறதெனு எண்ணுவது மிகையாகாது. காரியசித்தி வேண்டுமானல், இந்தியருக்குப் பிரிட்டிஷார் பால் அன்பு நிலவவேண்டுமானல் அடக்குமுறைகள் ஒழிந்து சமாதானத்தின் ஒவ்வோர்படியிலும் பிரிட்டிஷாரின் மனம் மாற்றமடைந்து நியாயவேலைகள் நடைபெறுகின்றன என இந்தியர் எண்ணும்படி நிர்வாக வேலைகள் நடைபெறவேண்டும்.

திருப்பத்தூர் தாலூகா காங்கிரஸ்.

அறிக்கை.

இத்தாலுக்காவிற்குட்பட்ட கிராமங்களிலும் நகரங்களிலும் புதிதாய் ஏற்படுத்தும் கிராம காங்கிரஸ் கமிட்டிக்காரர்கள் தங்கள் சபைகளில் சேர்ந்த சந்தாதார்களின் பெயரையும் அதன் கட்டணத்தையும் அனுப்பித் தங்கள் சபைகளைப் பதிவுசெய்துகொள்ள வேண்டுகிறோம். ஒவ்வோர் ஊரிலும் அந்நிய ஜவுளி மறியலோ, மதுபான மறியலோ ஆரம்பிப்பதாயின் ஒவ்வோர் ஊராரும் தாலுகா சபையின் அனுமதிபெற்றே ஆரம்பிக்கவேண்டுவதோடு ஒவ்வோர் வாரமும் அம்மறியல் சபையார் தாலுகாக் கமிட்டிக்கு ரிப்போர்ட் அனுப்பவேண்டுகிறோம். இப்பொழுது மறியல் ஆரம்பித்து நடத்துபவர்களும் அங்ஙனமே தங்கள் மறியலைப் பற்றிய எல்லா ரிப்போர்ட்களையும் அனுப்பவேண்டுவதோடு தொடர்ந்தும் ரிப்போர்ட் அனுப்பவேண்டுகிறோம்.

ஒவ்வோர் கிராமத்தாரும் மறியல் ஆரம்பிக்கும்பொழுது அறிவிக்கவேண்டுவதேபோல் மறியல்சம்மந்தமான உடன்படிக்கைகள் செய்துகொள்ளவேண்டுமாயினும் அப்பொழுதும் தாலுகா சபையின் அனுமதிபெற்றே அவ்வொப்பந்தஞ் செய்துகொள்ள வேண்டுகிறோம்.

புதிய இடங்களில் கிராம காங்கிரஸ் கமிட்டி நியமிக்க ஆதரவளிப்பவர்களும் விரும்புவர்களும் நமக்கறிவித்தால் உடனே அதற்குவேண்டிய ஆளனுப்பி ஏற்பாடுகள் செய்யப்படும். மேற்கண்டபடி எல்லா கிராமக்கமிட்டிகளும் முறையுடன் ரிப்போர்ட்டுகளை அனுப்பி உதவினால் தான் தாலுகாகமிட்டி தனது வேலையை ஒழுங்குபெறச்செய்து ஜில்லா, மாகாண கமிட்டிகளுக்கு வேலை விபரங்கள் போய்ச்சேரமுடியும். இதில் ஒவ்வோர் கிராமசபையும் தாலுகாசபையுடன் ஒத்துழைக்கவேண்டுகிறோம்.

இங்ஙனம்

பள்ளத்தூர்
10-9-31.

காரியதரிசி
திருப்பத்தூர் தாலுகா காங்கிரஸ்கமிட்டி.

கம்பராமாயணக் கதிர்மணிக்கோவை.

5. அநுபவம்.

நாரணன் நவில்வது.

(274-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

சந்தர்ப்பம் வாய்த்தவிடத்தில் கம்பர் தமது உலகாநுபவங்களை வெளியிடுவதில் எச்சரிக்கையுடையவராகவே இருந்திருக்கின்றனர். இராமாயண காவியத்தில் அத்தகைய சந்தர்ப்பத்தைக் கண்டு மகிழவும், ஆசிரியரின் மதிநுட்ப விற்பன கற்பனைகளைக் கண்டு காதலிக்கவும் தமிழ்ச்சுவை யுணர்ந்த ஒவ்வொருவரும் விரும்புவார்களென்றே நம்புகிறோம்.

இனி இராமாயண காவியத்தில் கம்பர் காட்டிய அநுபவப் படிப்பினைகளை ஆராய்வாம்: கம்பராமாயணம் சுயம்வர காண்டத்தில், 'விசுவாமித்திரன் ரகுநந்தனரின் உயரிய புகழை உரைத்ததற்பின், சீதை, 'தான் காதலித்தவீரன் இவன்தான் என்று உறுதிப்பட்டதும் ஏற்கனவே தன் மனக்கிழியில் எழுதிவைத்திருந்த இராமபிரான் திருவுருவத்தையே யன்றி தன் கண்ணெதிரே விளங்கும் கவினுருவத்தையும், தன் கைவளையை திருத்துபவளைப்போலக் கடைக்கண்ணால் நோக்கியதைக் கம்பர்:—

"ஐயனை அகத்து வடிவேயல புறத்தும்
கைவளை திருத்துபு கடைக்கணின் உணர்ந்தாள்"

என மொழியும் செய்யுள், இயற்கையில் பெண்களுக்குள்ள நாணத்தையும், சுபாவத்தையும் வெளியிடுகின்றதன்றோ?

II. பெண்களின் பெரியமனதை யாவராலும் அறியமுடியாதென்றும், அவர்கள் பேதைமைக்குணத்தை நீக்குதல் அசாத்தியமென்றும் அதன் அநுபவகுணத்தைச் சீதையின் வாக்கினின்றே

வெளிப்படுத்தவேண்டுமெனக் கருதிய கம்பர் இராமாயணம் யுத்த காண்டம் மீட்சிப்படலத்தில்:—

> ''பங்கயத் தொருவனும் விடையின்பாகனும்
> சங்குகைத் தாங்கிய தருமமூர்த்தியும்
> அங்கையி னேல்லிபோலனைத்து ணேக்கினு
> மங்கையர் மனநிலை யுணரவல்லரோ''

என மொழியச் செய்தனர். இது கம்பரின் முதிர்ந்த அநுபவத்தையும், அறிவின் மாட்சியையும் நன்கு காட்டுகின்றன.

III. தசரத மைந்தனைக் கைகேயி, நாடுவிட்டுக் காட்டுக்குச் செல்லும்படி செய்தபோது அயோத்தியின் மக்கள், தசரதருடைய நியாயமற்ற செய்கையைக் கண்டித்துக் கூறுவதைக் கேட்டுப் பொருத கம்பர்:—

"தன்னையறியாமல் மூடர்களின் சொற்களைக் கேட்டு மனஞ் சென்றவாறு நடக்கும் இயந்திரமே! வருத்துகின்ற இப்பாழ் உலகத்தில் வாழும் மனமே! உனது செயல் கொடிது'' என்று அழிவற்ற நாடக ஆசிரியராகிய ஷேக்ஸ்பியர், 'ஹென்றி' என்னும் அரசனை மொழிவதுபோல, 'தசரதன், கேகயன் மகள் அழகின் மாயவலையிற் சிக்கி அறிவிழந்து தனது மகனைக் காட்டுக்குத் துரத்தினன்' என மொழியும் பிரஜைகளின் வசைச் சொல், தசரதரின் உண்மைத் தன்மையை உணராது பேசும் 'பிதற்றல்கள்' என்று அயோத்தியாகாண்டம் நகர்நீங்கு படலத்தில்,

> "ஆதியரச னருங்கே கயன்மகண்மேல்
> காதன்முதிரக் கருத்தழிந்தா னென்பார்''

என்று கூறி, தமக்குள்ள ராஜவிஸ்வாசத்தை வெளியிடுவது சாலப் பாராட்டுதற்குரியதாம்.

'இராஜவிஸ்வாஸமுள்ளவன் எவ்வாறு கற்றறியாத மூடர்களை இகழ்வானோ! அதுபோல், தசரதரின் உள்ளக்கருத்தை ஓர்ந்துணராத அயோத்தி மக்கள், கேகயன் மகள் அழகுவலையில்

சிக்கி அறிவிழந்தான் எனக் கூறுவது பேதையர் அறிவற்ற வார்த்தை' என்பது கம்பர் கருத்தென மேற்காட்டிய செய்யுளால் அறியக்கிடக்கின்றது.

மதிநுட்பம்—அல்லது அறிவின் மாட்சி.

இராமாயண காவியத்தின் படலங்கள் பலவற்றிலும் உலகத்தின் மக்களுக்குத் தேவையான மதிநுட்பமும், அறிவின்மாட்சிமையும், அநுபவத்திறனும் விரவி அழகுடன் பொலிகின்றன. அல்லாமல், பிரார்த்தனையையும், அதன் பயனையும், உண்மையான வெற்றிப் பாட்டையும், பொறுமையின் பெருமையையும், காலத்தின் மதிப்பையும், மற்றும் ஜன சமூகத்திற்கு இன்றியமையாத விஷயங்களையும் இனிமையாக அமைதியுடன் போதிக்கின்றன.

கம்பராமாயணத்தில், முகவுரை சுருக்கமாயும், விவரிக்குந் தன்மை கற்பவரின் மனதில் பதியச் செய்வதாயும் அமைந்திருப்பது விசேடமானது. இனித் தலைப்பின் குறிப்பைப்பற்றிய விஷயத்தை ஆராய்வாம்:—

I. அயோத்திக்கு வந்து புத்திரகாமேஷ்டியாகஞ் செய்யும்படி கேட்டுக்கொண்ட கலைக்கோட்டு மாமுனிவர், தசரதரை ரோமபாத ரிஷிக்கு அறிவிக்கும்போது அரசர்பெருமானை:—

"புறவொன்றின் பொருட்டாகத் துலைபுக்கப்
பெருந்தகைதன் புகழிற்பூத்த
அறனென்று திருமனத்தான் அமரர்களுக்கு
இடரிழைக்கும் அவுணராயோர்
....
திறலுண்ட வடிவேலான் தெசரதனென்
றுயர் சீர்த்தி செங்கோல் வேந்தன்"

எனக் கூறுஞ் செய்யுளில், அரசர்பிரானது வமிசத்தார்களுடைய உதாரணகுணத்தையும், சுயநலங்கருதாது செய்துவரும்நன்மையையும், அரசர்க்குள்ள கடமையை நன்றாக ஆற்றிவரும் ஒழுக்கத்தையும், புகழ்தற்குள்ள பெருமையையுடைய தசரதரின் அரச பரிபாலனத்தையும் விளங்கச்சொல்லி, வேந்தர் பிரானை யாவரும் விரும்புமாறு செய்வது எத்துணை புத்திநுட்பமுடையதாகக்காண்கின்றது. (தொடரும்.)

பாண்டிநாட்டுச் சிற்பக்கோயில்.

தாட்டிகும்பு. (தாடிக்கொம்பு)

பழநி, திரு. நா. நடராஜமுதலியாரவர்கள் எழுதுவது.

இத்தலம் பாண்டியநாட்டு மதுரைஜில்லா திண்டுக்கல்லி னின்று 6 அல்லது 7 மைலில் வடக்குத்திசையிலிருக்கிறது. நல்ல ரோட்டு. போக்குவரத்துக்குச் சாதகமாக ஜட்காவண்டிகளும், மோட்டார் பஸ்களும் சொற்ப வாடகைக்கு விடப்படுகின்றன. "தாட்டிகும்பு" என்ற பதம் ஆந்திரபாஷை. தாட்டி—என்றால், பனை; கும்பு—என்றால் கூட்டம். இவ்விருபதங்களுஞ் சேர்ந்தால் "பனைமிகுதியாக நிறைந்தவிடம்" என்று பொருளாகின்றது. இந்நேர் பொருளிக்க இவ்வூரை மக்கள் 'தாடிக்கொம்பு' என்ற அர்த்தமேயில்லாத பெயரால் வழங்கப்பட்டு வருகின்றார்கள். சென்னை மைலாப்பூரிலுள்ள "ஹாரிஸன் பிரிட்ஜ்"க்கு 'அம்பட்டன் வாராவதி' என்று சென்னை நகரத்தார் தவறாகப் பெயர்கூறப் பட்டு வருவதுபோல் இங்கும் தவறாகப் பெயர் கூறப்பட்டு வருகிறது. வியக்கத்தக்க சிற்ப ஓவியங்கள் நிறைந்து சிறந்த இவ்வூர் விஷ்ணுவாலயத்தை ஆந்திர அரசர்களில் விஜயநகரத்து ஸ்ரீகிருஷ்ணதேவராயன் வமிசத்து அரசன் ஒருவனால் கட்டுவிக் கப்பட்டு அவனது அதிகாரத்திலும், போஷணையிலும் இருந்து வந்ததாக சாஸனங்களில் விவரிக்கப்பட்டிருக்கின்றன. சோழர், பாண்டியர்களைப் போலவே ஆந்திர அரசர்களும் நமது தென்னாட் டில் சிதம்பரம், திருவண்ணாமலை, ஸ்ரீரங்கம், மதுரை முதலிய திருத்தலங்களில் தமது பெயர்விளங்கப் பெருங்கோபுரங்களும் மண்டபங்களும் கட்டுவித்து அவற்றின் பராமரிப்புக்காக முற் றாட்டாக விளைநிலங்களும், வேண்டியன அளித்திருக்கின்றனர். இவ்வுண்மை, தேசசரித்திரங்களிலும், ஆந்திரபாஷை இலக்கியங் களிலும் கல்வெட்டுகளிலும் மிகுதியாகக் காணலாகும்.

இனி, இவ்வாலய அமைப்பு, சிற்ப உருவங்களின் அழகு, ஓவிய வல்லாரின் சிற்றுளித்திறமை, சித்திரத் தூண்களின் எண்

ணிக்கை அவைகளின் விளக்கம் முதலானவைகளை யாத்ரீகர்களின் நன்மையின் பொருட்டு இதன்கீழ் விவரிக்கின்றோம்.

இப்பொழுது சிற்றூராய் சிற்பத்திற்கோர் எடுத்துக்காட்டாய் பெயர் சிறந்து விளங்கும் இத்தாட்டிகும்பில், கிழக்குத்திசையில் ஊரை யொட்டிக் காணும் விஷ்ணு ஆலயமே யாத்ரீகர்கள் கண்டு மகிழக்கூடியது. இவ்வாலயத்தில் கோயில்கொண்டருளும் பெருமானுக்குச் "சௌந்திரராஜன்" என்று பெயர்; உபயபிராட்டியார் பெயர்கள் "சௌந்தரவல்லியார்" "நாச்சியாரம்மை," என்பன. ஆலயம் சிறியது. வெளிப்பிரகார மதிற்சுவர்கள் சுமார் 4 அடி அகலத்திலும், 300 அல்லது 400 கஜதூரநீளத்திலும் எழுப்பப்பட்டிருக்கின்றன. செங்கல்லாலும், சுண்ணாம்பாலும், கட்டப்பட்ட இம்மதிற்சுவர்கள் நன்கருச்செதுக்கிய கருங்கற்களை இருபுறமும் ஒழுங்காக வொட்டி வரிசைபெறக் கட்டப்பட்டிருக்கின்றன. ஆனால், அவைகள் இப்பொழுது நான்குபுறங்களிலும் சரிந்து வீழ்ந்து மிக்க ஜீர்ணதசையடைந்திருக்கின்றன. இரண்டாம் பிரகாரச் சுற்று மதிற் சுவர்கள் கிலகமின்றி நன்னிலையிலிருக்கின்றன. ஆலயம் மேற்றிசை நோக்கிய சந்நிதியானதால் முன்வாயலின் பெரிய கோபுரம் கிழக்குத் திசையில் உயர்ந்து திகழ்கின்றது. இக்கோபுரவாயல் அடைக்கப்பட்டிருப்பதால், யாத்ரீகர்கள் வடக்குப்பாகத்திலுள்ள சுவர்க்கவாசல் வழியாகச் சென்று பெருமாளைத் தரிசித்துவருகின்றார்கள். ஆலயம் தரைமுழுதும் கருங்கற்களாலேயே நன்றாக தளவரிசை செய்யப்பட்டிருக்கிறது. சௌரிராஜப்பெருமாள் கோயிலும், சௌந்திரவல்லித்தாயார் சந்நிதியும் யாத்ரீகர்கள் விரும்பிப் பார்க்கக்கூடிய அழகு உடையனவாயில்லை. நாச்சியாரம்மையின் சந்நிதி ஒன்றுதான் சிற்ப ஓவியங்கள் சிறப்பாக நிரம்பிக் காண்போர் கண்களுக்கு நல்விருந்தாகத் திகழ்கின்றன. இச்சந்நிதியின் முன்மண்டபம் 34 அடி அகலமும், 100 அடி நீளமும் உடையனவாயிருக்கின்றன. இம்மண்டபம "அண்ணுமண்டபம்" என்ற பெயரால் வழங்கப்படுகிறது. இப்பெயர் இம்மண்டபத்திற்கு இடப்பட்டிருப்பதை மேற்குக் கோடிச் சுவற்றினுல் சாஸனம் வெட்டப்பட்டிருக்கும் சாஸனத்தால் அறியப்படும்.

கிழமேல் வரிசையில் எடுக்கப்பட்டுள்ள இவ்வண்ண மண்ட பத்தின் தெற்குப்பாகத்திலும், வடக்குப்பாகத்திலும் நிறுத்தப் பட்டுள்ள 26 பெருந்தூண்களில் 14 தூண்களே சிற்பத் திறமை யில் ஒப்பற்ற அழகுடையன. இப்பதினான்கு தூண்களிலும் செதுக்கப்பட்டுள்ள சித்திரங்கள் சிவபுராண—விஷ்ணுபுராணக் கதைகளைத் தழுவிச் சித்தரிக்கப்பட்டுள்ளன. சைவ வைணவ மதங்களில் வேற்றுமைகொள்ளாது சமரஸ நிலைமேற்கொண் டிருந்த அதிகாரி யொருவரின் நன்முயற்சியால் இம்மண்டபத் தூண்கள் சித்தரிக்கப்பட்டிருக்க வேண்டுமென இத்தூண்களைக் காண்பார் கூறத்துணிவர்.

ஸ்தம்பங்களில் செதுக்கப்பட்டுள்ள சித்திரங்களின் அழகும், ஓவியவல்லாரின் சிற்றுளித்திறமையும் வியந்து பாராட்டத்தக்கன. கருங்கல்லிடை நுண்ணிய சிற்றுளியால் சிற்பக் கலைகளில் ஒப்புயர்வற்ற திறமையாளர்களைக் கொண்டு இச் சித்திரக்கால் கள் செதுக்கப்பட்டிருக்க வேண்டுமெனத் தெரிகிறது. கொங்கு நாட்டுத் தேவார வைப்பு ஸ்தலங்களில் ஒன்றாகிய மேலைச் சிதம் பரம் என்னும் திருப்பேரூர் ஸ்ரீநடராஜர் கனகசபையிலுள்ள அழகிய எட்டுச் சித்திரத்தூண்களின் சாயலைப் பெரும்பாகம் இவ்வண்ணமண்டபப் பதினான்கு தூண்களும் ஒத்திருப்பினும் பேரூர்கனகச்சபைத் தூண்களின் அந்த மிகு அமைப்பிற்கு இவை பிற்பட்டதென்றே தாராளமாகச் சொல்லலாம். ஆயின், அண்ணமண்டப ஓவியத்தூண்களின் முகங்களிலும், கைகால் களிலும் மின்னிப் பிரகாசிக்கும் பளபளப்புக்கள் பேரூர் சித்திரக் கால்களிலுள்ள பிம்பங்களிலில்லை. அல்லாமல், நாச்சியார் சந்நிதித் தம்பங்களின் ஓவியங்கள் சுமார் 5 அடி முதல் 8 அடி வரை உயர முடையனவாய், சிரம், முகம், கைகால்கள், இடை, வயிறு முதலான அங்கங்கள் மிகப் பருமனாகவும், அழகாகவும் இயற்கைக்கு மாறுபாடின்றியும் இருப்பது வியத்தற்குரியன.

இனி அச்சித்திரத்தூண்களில் செதுக்கப்பட்ட சைவ வைணவ முகூர்த்தங்கள் இன்னின்னவை யென்பதும், அவை களது திருக்கோல மிவை யென்பதும் காண்பார்க்கு விளங்கும் படி இதனடியில் விவரிப்பாம்.

(தொடரும்.)

கனகவல்லி.

அல்லது

கள்வர்கவர்ந்த கன்னிகை.

கோவை. திரு. சி. கு. நாராயணசாமி முதலியார்
அவர்கள் எழுதியது.

என்று அன்பொழுகப் பாராட்டினர். பிரதாபருத்திரன் வளர் பிறை நிலவொப்ப நாளும் வளர்ந்து ஐந்தாம் வயதின் எல்லையை அடைந்தான். அதுமுதல் அரசராவோர் கற்கவேண்டிய தரும சாஸ்திரங்களும், நீதி நூல்களும், அரசியல் வரலாறுகளும், யானை யேற்றமும், குதிரைச்சவாரியும், சிலம்பத்தொழிலும், வில்வித்தை யும், வாள்வீச்சும் கற்பதற்கு ஏற்பாடு செய்தனர். 16 ஆண்டிற் குள், மேற்கூறியவைகளுடன்,

"கல்வியும். இளமையிற் கணக்கில் ஆற்றலும்
வில்லினை உரிமையும், அழகும் வீரமும்
எல்லையில் குணங்களும்"

இளவலுக்கு எய்தின. நாள் வளரவளர தோன்றலுக்கு அறி வும் அதிகரித்தே வந்தது. அதனுடன் எதனையும் நுணித்தறியும் அரிய சக்தியும், அரசுரிமை நடாத்துந் திறமையும் உண்டாயின. இவையறிந்த ருத்திரம்மதேவி ராஜ்யபாரத்தைப்பேரனாகிய பிரதாப ருத்திரனுக்குப் பிரதிஷ்டை செய்வித்துக் கணபதிதேவனது உடைவாளையும் அவனிடம் கொடுத்துத் தான் மாதர் வசிக்கும் அந்தப்புரஞ் சேர்ந்தாள். திருமுடி புனைந்து செங்கோலேந்தி அரியாசனத்தமர்ந்த பிரதாபருத்திரன், அமைச்சு, நாடு, அரண், பொருள், படை, நட்பு, என்னும் ஆறங்கங்களையும் அடைந்து அஞ்சாமை, அறிவூக்கம், தூங்காமை, கல்வி இவைகளைக்கொண்டு ஓதல், வேட்டல், ஈதல், என்னும் பொதுத் தொழிலிலும், படைக் கலம் பயிலல், பல்லுயிரோம்பல், பகைத்திறந் தெரிதல் என்னும் சிறப்புத்தொழிலிலும் வழுவாது நின்று; பகைவரை வருத்தல்,

திறைகோடல், தன்னுடு தலையளித்தல் முதலியவற்றால் மண், பொன்,நெல் முதலிய பொருள் வருவாயைப்பெருக்கி அவைகளைப் பகைவர், கள்வர் சுற்றத்தார், வினை செய்வோர் முதலியவர்களால் கவரவிடாது காத்து; கடவுள், அறவோர், வறியவர், என்றின்ன வர்கட்கு அறம்பொருட்டாகவும், கரி, பரி, படை, நாடு, அரண் முதலியவற்றிற்குப் பொருள் பொருட்டாகவும், மண்டபம், வாவி, செய்குன்று, இளமரக்கா என்றவற்றிற்கு இன்பப் பொருட்டாக வும் முகமலர்ந்து இன்மொழிபுகன்று அப்பொருளைக் கொடுத் தும்; காட்சிக் கெளியனாய், கடுஞ்சொல் இன்னாய், இடித்துரை பொறுத்து இன்சொற் கூறுவோனாய் விளங்கிக் கல்வி அறிவால் பெரியாரைத் துணைக்கொள்ளுதலும், இறைமாட்சியால் சிற்றினந் தவிர்தலும், உறவினர், பகைவர் என்று யார்மாட்டும் சார்பின்றி நடுநிலை நிற்றலும் என்றுதிய அரசர்க்குள்ள இலக்கணங்களை ஒருங்கேயடைந்து சிறந்தனன்.

இவன் அரசாட்சி யென்னும் இயந்திரவுருவுக்கு மந்திரிகளே கண்களாகவும், குடிகளே கால்களாகவும் நட்பாளரே வலிய புயங் களாகவும், ஒற்றுவரே செவிகளாகவும், விதிநூல்களே உணர்ச்சி யாகவும், தூதுவரே வாயாகவும் கூறப்பட்டுள்ளன வென்பதை அறநூல்களால் அறிந்தவனானதால், அவர்களை அங்கங்களாகக் கொண்டு தமது பரிசனங்களாலும், பகைவர்களாலும், கள்வரா லும், விலங்கினங்களாலும் குடிகட்கு அச்சமுண்டாகாமல் முன் னின்று காத்து:—

"வைய மன்னுயிராகவும் மன்னுயி
ருய்யத் தாங்குமுடலன்ன மன்னவன்"

என்னும் இலக்கியத்திற்கும் உரியனாக அரசுபுரிந்தனன். இவனது அரசாட்சியில் குடிகளுக்கு விளைந்த நன்மைகள் அள விறந்தன. முன்னேமுளைத்த காதைவிடப் பின்னேமுளைத்த கொம்பு வலியுடைத் தென்பது போலத் தனது தாதைகளும், மூதாதைகளும், குடிகளுக்குச் செய்த நன்மைகளைவிட பன் மடங்கு நன்மைகள் பல செய்ததால் பிரஜைகள் இவனைத் தங்க ளிரு கண்ணென மதித்துக்கொண்டாடினர். இதனால் இவனது

புகழ் குன்றின்மேல் தீபமென்ன விளக்கமடைந்தது.

"ஆங்கமை வெய்தியக் கண்ணும் பயமின்றே
வைந்தமை யில்லாத நாடு"

(திருக்குறள்)

என்று திருவள்ளுவ தேவர் திருவாய்மலர்ந்தருளியவாறு நாடானது எல்லா நலன்களாலும் சிறப்புற்றிருப்பினும், அரசனிடத்துக் குடிகளுக் கன்பும், குடிகளிடத்து அரசனதருளும் இல்லாவிட்டால் மதியிலா வானமும், மக்களில்லா மனையும், கண்ணில்லா முகமும், கணவனில்லாக் காரிகையும், பொருளிலார் இளமையும் போல் வீணேயாகும். ஆயின், நமது பிரதாபருத்திரன் ஆட்சியில் மேற்கூறிய குறைகளுக்குச் சிறிதும் இடமின்றி அரசனும், குடிகளும் உடலும் உயிரும்போல் ஒற்றுமைப்பட்டிருந்தார்கள்.

இங்ஙனம் இவனது அரசகாரியம் ஒற்றுமையுடன் இனிது நிகழ்ந்துவந்ததனால் இவனுக்குப் பகையென்பதின்றி ஜயசீலனாய் விளங்கினன். சாந்தமூர்த்தியும், வித்வஜன விதேயனும், சத்துரு பயங்கரனுமான பிரதாபருத்திரன் தனது நாட்டைத் தெற்கில் கன்னியாகுமரிவரை பரவச்செய்தான். யாவரும் இவனைத் "திரிலிங்க சாம்ராஜ்ய துரந்தரன்" என்று புகழ்ந்துகொண்டாடினர். பாவாணர் பாட்டிசைத்தும், வித்துவான்கள் காவியம் இயற்றியும், நாவலர் தமது சொற்பெருக்கைக் காட்டியும் பரிசுபெற இவனது கொலுக்கூடத்தைச் சூழ்ந்தனர். 'வண்டு மலர்ச்சேர்க்கையை' விரும்புவது இயல்புதானே.

இவர்களேயன்றிப் பிரதாபருத்திரன் அவைக்களப் புலவர் பலராவர். இவர்களில் முதன்மையுடையவர்கள், வால்மீகி இராமாயணத்தைத் தெலுங்குபாஷையில் மொழிபெயர்த்த 'உளக்கிபாஸ்கரன்;' மார்க்கண்டேய புராணத்தை ஆந்திரபாஷையில் தர்ஜமாச் செய்த 'மாரன்னகவி' 'பிரதாபருத்ரீயம்' என்னும் அலங்கார சாஸ்திரத்தை உலகம் உள்ளவும் நிலைபெறும்படி இயற்றிய 'வித்தியாநாதன்' என்பவர்களே.

இனிப் படைப்பெருக்கும், வீரச்செருக்கும் உடைய பிரதாப ருத்திரனது பல்வேறு படைகளில் யுத்தவீரர்களும், சேனாநாயகர்களுமாகத் திகழ்ந்த ரெட்டிகள், கம்மவார், நாய்க்கர், வேளாளர் முதலியோர் கணக்கிலடங்கிலராவர். இவர்கள் யுத்தப்பிரியார்களாய் அஞ்சா நெஞ்சுபடைத்து உயிரைத்திரணமென மதித்து, தோள்த்தினவுடன் தேசாபிமானத்தால் தூண்டப்பெற்றுப் பல யுத்தங்களில் போர்புரிந்து வீரசிகாமணிகளாய் வெற்றிமாலை புனைந்தவர்கள். இவர்களது சுத்தவீரத்திற்கு வியந்து மகிழ்ந்த பிரதாப ருத்திரன் இவர்கட்கு பொன், பொருள், வாகனம், பூமி முதலியவைகளை ஏராளமாக வெகுமதிசெய்தான். இன்றைக்கும் அவ்வெகுமதிகள் பெற்ற வீரகுடும்பத்தினர் ஆங்காங்கு வாழ்கின்றனர். தனக்கென வாழாப் பிறர்க்குரியாளனாகிய பிரதாபருத்திரன்:-

"மலைமிசைத் தோன்று மதியம்போல் யானைத்
தலைமிசைக் கொண்ட குடையர்—நிலமிசைத்
துஞ்சினா ரென்றெடுத்துத் தூற்றப்பட்டா ரல்லர்
எஞ்சினா ரிவ்வுலகத் தில்"

என்னும் செய்யுளுக்கு இலக்கியமாய் பொய்யுடம்பு நீத்துப் புகழுடம்பு பெற்று இன்றைக்கு 358 ஆண்டுகளாயினும், அவ்வாசனது வரலாற்றைச சொல்லக்கூடியவரும் அதனை அன்புடன் கேட்கக்கூடியவரும் இல்லை யென்று சொல்வது அதிசயோக்தியாகாது.

யுத்தமும்—தோல்வியும்.

"வறியவர் செல்வராவர் செல்வர்பின் வறியராவர்
சிறியவ ருயர்ந்தோ ராவ ருயர்ந்துளோர் சிறியராவர்
முறைமுறை நிகழுமீது முன்னையூழ் வினையே கண்டாய்
எரிகதிர் வழங்கு ஞாலத்தியற்கையு மினையதன்றோ"

(கந்தபுராணம்.)

கி. பி. 1306-ஆம் ஆண்டு அயோத்தியில் சம்ஸ்தானாதிபதியாய் அரசுசெலுத்திய மகம்மது "டோக்லாக்" என்னும் கொடிய துருக்கவரசன் இந்து தேசத்தில் ஆங்காங்கு அரசுசெய்யும்

(தொடரும்.)

Regd. No. M. 2646.

கம்பெனி வேலைக்கு உத்திரவாதம்.

உயர்ந்த சாமான்கள்! குறைந்த விலை!!

உங்கள் வீட்டை அலங்கரிப்பதற்கு,

எங்கள் கம்பெனியில் எல்லாவித மரச்சாமான்களும் வீடுகளின் உபயோகத்திற்கும் ஆபீஸ்களின் உபயோகத்திற்கும் உயர்ந்த பங்களாக்களை அலங்கரிப்பதற்கும் கலியாணச் சீர்களுக்கும் தகுதியான முறையில் உயர்ந்த சாமான்களைக்கொண்டு உறுதியாயும் வேலைப்பாடுகளுடனும் தேக்கு, தோதகத்தி முதலிய மரங்களில் செய்து வைத்துள்ளோம். விலை மிகக் குறைவு. தயாராக உள்ள தன்னியில் எவ்வித சாமான் வேண்டுமானாலும் மாதிரி காண்பிப்பின் குறித்தகாலத்தில் அதேமாதிரி செய்து கொடுக்கப்படும்.

ஓர் முறை வந்து எங்கள் கம்பெனியைப் பார்வையிடுங்கள்.

மஹாதேவன் கம்பெனி,

மரச்சாமான்கள் வியாபாரம்

கானாடுகாத்தான்.

(ராமநாதபுரம் ஜில்லா.)

Printed & Published by S. RM. RamanathaMudaliar,
at Vedhambal Press, Pallatur. (RamnadDt.)

மதிப்புரை.

"குலாலமித்திரன்" எனப்பெயரியமாதப்பத்திரிகையின் தொகுதி 1 முதல் பகுதி 4 வரை வரப்பெற்ரேரும். இவைகளை எம்பாலன்பு கூர்ந்து அனுப்பிய ஆசிரியர்க்கு வந்தனம். தென்னிந்திய குலாலர் சங்கத்தின் ஆதரவில் குலாலமக்களின் முன்னேற்றங்கருதி வெளி வரும் இச்சமூக மாஸிகை குன்றமெறிந்த குமரவேள் கோயில் கொண்டருளும் பழநியினின்றும் பிரசுரமாவது. உயர்ந்த காகிதத் தில் ஆப்டோன்படங்களுடன் பிரசுரமாகும் இப்பத்திரிகை தனது பெயருக்கேற்பத் தங்குலத்தினர் முன்னேற்றத்திற்குரிய கல்வி, கைத்தொழில், வியாபாரம், கிராமவாழ்க்கை, ஒற்றுமை, ஒழுக்கம், சுகாதாரம் முதலிய விஷயங்களையே தன்னகத்தேந்தித் திகழ் கின்றது. திரு. மு. பெரி. வீர. அழகர்சாமி வேளார் அவர்கள் தலைமையில் நடைபெறும் குலாலமித்திரன், திருநீலகண்டப்பெரு மான் திருவருள் சிறக்க நன்ருயோங்கி நலம்பெற வாழ்த்துகின் ரேரும். வருடசந்தா ரூபாய் 1—4—0 வேண்டுவோர் அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதுக. மானேஜர்

குலாலமித்திரன் காரியாலயம் பழநி.

நீங்கள் எலக்டிரிக் வயரிங் செய்ய விரும்புகிறீர்களா?

அப்படியானுல் எங்களிடம் ஓர் முறை ஆர்டர் கொடுத்துப் பாருங்கள். குறைந்த கூலியில் உயர்ந்தமுறையில் வேலை செய்து தரு வோம். எல்லாவகையான எலக் டிரிக் சாமான்களும் சப்ளை செய்யப்படும்.

T. R. இரங்கசாமி.

பள்ளத்தூர்.